# கீதாசாரத் தாலாட்டு



ப்ரக்ருன்

# நூல் விளக்கம்


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | கீதாசாரத் தாலாட்டு |
| ஆசிரியர் | : | திருவேங்கடநாதர் |
| விளக்க உரை | : | ப்ரக்ஞன் |
| மொழி | : | தமிழ் |
| வகை | : | உபதேசம் |
| முதற்பதிப்பு | : | 2020 |
| பக்கங்கள் | : | 128 |
| தாள் | : | A5 (5.83” X 8.27”) |
| எழுத்து அளவு | : | 12 புள்ளிகள் |
| கணினி அச்சு | : | ஓம் கிராபிக்ஸ் |
| விலை | : | அக விழிப்பு |

# கீதாசாரத்

# தாலாட்டு

நூல் ஆசிரியர்:–

## திருவேங்கடநாதர்

விளக்க உரை

## ப்ரக்ஞன்

தந்தைதாய் ஆவானும் சார்கதிஇங் காவானும்

அந்தமிலா இன்பநமக் காவானும் – எந்தம் உயிர்

தான் ஆகுவானும் சரணாகுவானும் அருட்

கோனாகுவானுங் குரு.

நில்லா நிலையை நிலையாக நெஞ்சத்து

நில்லாக் குரம்பை நிலையென் றுணர்வீர்கள்

எல்லா உயிர்க்கும் இறைவனே ஆயினும்

கல்லார் நெஞ்சத்து காண ஒண்ணாதே.

# கீதாசாரத் தாலாட்டு

(திருவேங்கடநாதர்)

## முகவுரை

இந்த '**கீதாசாரத் தாலாட்டு**' என்ற நூல், திருவாமாத்தூர் ஸ்ரீ திருவேங்கடநாதர் அருளியது.

அற்புதமான தாலாட்டுப் பாடல்களைக் கொண்ட இந்த நூல், குழந்தையைத் தூங்க வைப்பதற்காக, அதைத் தாலாட்டும் பொருட்டு, பகவத் கீதையின் ஞான யோகத்தின் சாரமான தத்துவ விளக்கங்களை எளிமையான தாலாட்டுப் பிரபந்தமாகக் கொடுத்து, பாமரரும் பயின்று அறிந்துக் கொள்ள வேண்டும் என்ற நல் நோக்கினில், இந்த நூலாசிரியர் 104 தாலாட்டுப் பாடல்களாக வெளிப்படுத்தி இருப்பது, அவரது உயர்ந்த ஆன்ம ஞான சிந்தனையை வெளிப்படுத்தியுள்ளது.

இந்த நூலிலே அர்ஜுனன் ஸ்ரீ கண்ணபிரானிடம் ஆன்ம ஞான தத்துவங்களை சந்தேகம் கேட்பதுப் போன்றும், அதற்கு பகவான் ஸ்ரீ கண்ணன் பதில் அளிப்பதுப் போன்றும் அமைக்கப்பட்டுள்ளது. இந்த நூலின் வாயிலாக மெய் ஞானத்தை அடைய விரும்புகின்ற ஆர்வமுள்ள முமுக்ஷுக்கள்

தங்களுக்கு உண்டாகின்ற பல்வேறு சந்தேகங்களை தெளிவு படுத்திக்கொள்ள முடியும்.

அனைவரும் இந்த நூலைக் கற்று, என்றும் அழியாத அந்த ஆன்மாவாகவே "**நான்**" இருக்கின்றேன் என்ற மெய் ஞானத்தை அடைந்து, தன் சொரூபத்தில் நித்தமும் நின்று, நிலையான பேரின்பத்தை பெற்றிட வேண்டும் என்பதற்காக, தமிழ் வேதாந்த பாடங்களைக் கொண்ட, இந்த தாலாட்டுப் பாடல்களை, எளிய தமிழ் உரை நடையில் விளக்கம் அளித்து, இன்றைய இளைய தலைமுறை மாணவர்களும் எளிதாகக் கற்றுக் கொள்ள ஏதுவாக இந்த நூல் விளக்கப்பட்டிருக்கின்றது.

இந்த நூலை முழுமையாகக் கற்று முடித்தவர்கள், நிச்சயம் மெய்ஞ்ஞானத்தை அடைந்து, பிறவாப் பெருநிலையை அடைவார்கள் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை. ஆகவே, அனைவரும் கற்று பயன் அடைய வேண்டும் என்பது, ஈஸ்வர சங்கல்பமாக இருப்பதினாலேயே, இந்த நூல் தற்பொழுது தங்கள் கைகளில் கிடைத்திருக்கின்றது.

நன்றி,

**என்றும் அன்புடன்,**

**ப்ரக்ஞன்**

# நூல் அறிமுகம்

தொண்டை நாட்டில் மாதைப்பதி என்று அழைக்கப் படுகின்ற, திருவாமாத்தூர் என்னும் ஊரின் குறுநில மன்னனாக விளங்கியவர் இந்த நூலாசிரியரான திருவேங்கடநாதர்.

இவருக்கு இரு புதல்விகள் இருந்தனர். இவர்களுள் ஒருத்திக்கு மகப்பேறு வாய்க்கப் பெறாமையால் மனம் வருந்தி ஏங்கித் தவித்தாள். அன்பு மகளின் ஏக்கத்தைக் காணச் சகியாத தந்தையாகிய திருவேங்கடநாதர், அழகிய கண்ணன் பொம்மை ஒன்றை அவர் மகளுக்கு பரிசாகக் கொடுத்து, அந்த பகவான் ஸ்ரீ கிருஷ்ணனையே அவளது குழந்தையாக பாவிக்கும்படி கூறினார்.

மேலும், தன் அன்பு மகளிடம் கொடுத்த, அந்த கிருஷ்ணர் பொம்மைக் குழந்தையைத் தூங்க வைக்க, அதைத் தாலாட்டும் பொருட்டு, பகவத் கீதையின் ஞான யோகத்தின் சாரமான தத்துவ விளக்கங்களை தாலாட்டுப் பிரபந்தமாக கொடுத்து, அதற்கு **"கீதாசாரத் தாலாட்டு"** என்று பெயர் சூட்டி, தாலாட்டுப் பாடல்களாக ஆக்கிக் கொடுத்தார்.

அவரது மகளும், தன் தந்தையின் அருள் வாக்கின்படி ஸ்ரீ கிருஷ்ணன் பொம்மைக்கு பாலகிருஷ்ணன் என்று பெயர் சூட்டி, அதனைத் தொட்டிலில் இட்டு சீராட்டி, பாராட்டி, அந்தப் பாடல்களின் வாயிலாக, தினமும் தாலாட்டி வரவே, சில ஆண்டுகளில், அவரது அன்பு மகளுக்குப் புத்திரப்பேறு வாய்த்தது என்று, இந்த நூலைப் பற்றிய வரலாறு கூறுகின்றது.

இந்த '**கீதாசாரத் தாலாட்டு**' என்ற நூல் அர்ஜுனனின் சந்தேகத்திற்கு, பகவான் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா சமாதானம் கூறும் விதமாக அமைந்துள்ளது.

பந்த மோக்ஷங்களின் இயல்பு பற்றியும், ஒரு சிலர் ஞானிகளாகவும், ஒரு சிலர் அஞ்ஞானிகளாகவும் இருப்பதற்குக் காரணம் என்ன? போன்ற பல்வேறு சந்தேகங்களுக்கு விளக்கம் அளிக்கும் வகையில், இந்த நூல் மிக எளிமையாக அமைக்கப்பட்டுள்ளது.

இத்துடன் இந்த ஜடம் ஆன உடல் எவ்வாறு கர்மத்தைச் செய்யும்? அந்தக் கர்ம பலனை அது எவ்வாறு அனுபவிக்கும்? என்பது பற்றியும், இத்தகைய கர்மங்கள் உண்டாவதற்குக் காரணம் என்ன? போன்ற மேலும், பல சந்தேகங்கள் இந்த நூலின் வாயிலாக தீருகின்றது.

இந்த உடலையும், இந்திரியங்களையும் "**நான்**" அல்ல என்று அறிந்து, சந்தேகம் தெளிந்து, நல் விவேகத்தினை இந்த நூலைக் கற்கின்றவர்கள் அடையுமாறு, ஆழ்ந்த பல ஆழமான கருத்துக்களை இந்த நூலாசிரியர் மிகத் தெளிவாக எடுத்துக் கூறி, சாமானிய மக்களும் ஆன்ம ஞான தத்துவத்தை எளிதில் அறிந்துக் கொள்ளுமாறு எடுத்துக் கூறுகின்றது, இந்த "**கீதாசாரத் தாலாட்டு**" என்ற *'தமிழ் தாலாட்டுப் பாடல்கள்'* அடங்கிய இந்த அருமையான நூல்.

# கீதாசாரத் தாலாட்டு

## (திருவேங்கடநாதர் அருளியது)

## சிறப்புப் பாயிரம்

மாதையர்கோன் வேதநவில் வாய்வேங் கடநாதன்
காதையுறப் பார்த்தனுக்குக் கண்ணனருள் – கீதைக்
கருத்துயர்தா லாட்டாகக் கட்டுரைத்தான் யாரும்
கருத்துயர்தீர்ந்(து) எய்தக் கதி.

**விளக்கம்:**

திருவாமாத்தூர் என்னும் ஊரிலே, மன்னனாக வாழ்ந்த, வேதம் பயின்ற வேங்கடநாதன் என்பவர், அர்ஜுனனுக்குக் கண்ணபிரான் விரிவாக அருளிய, பகவத்கீதையின் மிக உயர்ந்த கருத்துக்களை, பாமரரும் பயின்று பயனடைய வேண்டும் என்பதற்காகவும், கொடிய பிறவித்துன்பம் நீங்கி, பிறவாப் பெரு நிலையான, மகிழ்ச்சியைக் கொடுக்கும், மோக்ஷ கதியை அவர்களும் அடைய வேண்டும் என்பதற்காகவும், எளிய தாலாட்டுப் பாடலாக அமைத்துள்ளார்.

# இறை வணக்கம்

ஐவகைப் பொருளும் நான்கு கரணமும் குணங்கள் மூன்றும்
செய்வினை இரண்டும் ஒன்றி யாவரும் திகைப்ப நின்ற
பொய் இருள் அகல ஞானப் பொருட்கதிர் விரித்த புத்தேள்
கைவளர் ஆழிச் செங்கண் கண்ணனைக் கருத்துள்
வைப்பாம்.

**விளக்கம்:**

ஆகாயம், காற்று, நெருப்பு, நீர், நிலம் என்ற ஐந்து பூதங்களும், ஒலி முதலான விஷயங்களை அறியக்கூடிய அறிவுக் கருவிகளான காதுகள், கண்கள், மூக்கு, நாக்கு, தோல் முதலான ஞானேந்திரியங்கள் ஐந்தும், சப்தம் முதலியவைகளை வெளிப்படுத்தும் செயற்கருவிகளான வாய், கைகள், கால்கள், எருவாய், கருவாய் முதலான கர்மேந்திரியங்கள் ஐந்தும், பிராணன் முதலான வாயுக்கள் ஐந்தும் ஆகிய ஐந்து வகைப் பொருளும்.

மனம், புத்தி, சித்தம், அகங்காரம், என்ற நான்கு வகை அந்தக்கரணங்கள். சத்துவம் ரஜஸ் தமஸ் ஆகிய மூன்று குணங்கள். நல்வினை, தீவினை என இரண்டு விதமான செயல் வினைகள் போன்ற இவைகள் அனைத்தையும் தனது

என்ற அபிமானத்தினாலே, அதிலேயே ஒன்றி, அஞ்ஞானம் என்ற இருளை பற்றிக் கொண்டு, அனைவரையும் மயங்கி நிற்கச் செய்யும் மாயையாகிய பொய் இருள் நீங்க வேண்டுமானால், **தத்துவஞானம்** என்ற மெய்ப்பொருள் ஞானத்தை அடைய வேண்டும்.

அந்த மெய்ஞ்ஞானத்தை அடைவதற்கு, கதிவனின் ஒளிக்கதிர்கள் எவ்வாறு பிரகாசமாக இந்த பூமியை நோக்கிப் பாய்கின்றதோ, அவ்வாறு, சங்கு, சக்கரங்களை தாங்கிய திருக்கரங்களையும், சிவந் விழிகளையும் உடைய ஞான சூரியனாகிய பகவான் ஸ்ரீ கண்ணனை **(ப்ரம்மத்தை) மெய்ஞ்ஞானத்தின்** ஆழ்ந்த கருத்தாகிய, தன்னில் தானாய் தன் சொரூபத்தில் இருந்துக் கொண்டு தியானிப்போமாக.

# பாடல்கள்

**பாடல் 1**

*இறைவனே சத்குருவாக வருதல்!*

**சீர் ஆரும் பரமார்த்த தெரிசனத்தை அருள்செய்யப்**
**பேர் ஆரும் தேசிகனாய்ப் பெருமானே வந்தவரோ.**

**பொருள்:**

சிறப்பு வாய்ந்த ஆன்மாவாகிய பரம்பொருள் தரிசனத்தை அருள் செய்ய, இறைவனே சத்குரு மூர்த்தியாக இறங்கி வந்தவர் நீர்தானோ.

**விளக்கம்:**

உலகம், உயிர், இறைவன், ஆகிய மூன்றின் தத்துவங்களையும், அதன் வாயிலாக பரமாத்ம தரிசனத்தை அர்ஜுனன் வாயிலாக, அனைத்து மனிதர்களுக்கும் அறிந்துக் கொள்ளும்படி, உபதேசிக்க வேண்டும் என்ற உயர்ந்த சத்குருவாக, அந்த பரம்பொருளே பகவான் ஸ்ரீ கண்ணனாக எழுந்தருளி இருக்கின்றார்.

<u>பாடல் 2</u>

*மெய்ஞ்ஞானத்தை உபதேசித்தல்!*

**திருத்தேரில் சாரதியாய்ச் சேர்ந்து இருந்தும் கீதையினால்
அருச்சுனற்கு மெய்ஞ்ஞானம் அனைத்தும் உரை செய்தவரோ.**

<u>பொருள்:</u>

சிறந்ததொரு தேரின் பாகனாய் இருந்தும், கீதா உபதேசமாய் அருச்சுனனுக்கு மெய்ப்பொருள் அறிவை முழுவதுமாக உபதேசித்து உரைத்தருளியவர் நீர்தானோ.

<u>விளக்கம்:</u>

குரு உயரமான இருக்கையில் அமர்ந்து உபதேசிப்பதும், சிஷ்யன் அவருக்கு அருகே கீழே அமர்ந்து இருந்து கேட்பதும்தான் மரபு. மேலும், வேறு எந்தத் தொழிலும் இல்லாமல், அமைதியான தனித்த இடத்தில் அமர்ந்து கற்பிப்பது வழக்கம். ஆனால், இங்கு அர்ஜுனனுக்கு தேரோட்டியாக பகவான் ஸ்ரீ கிருஷ்ணன் யுத்தகளத்திலே இருந்தும், அவரது பெருங்கருணையால் அர்ஜுனனுக்கு ஆன்ம தத்துவத்தை உபதேசித்து அருளினார்.

<u>பாடல் 3</u>

*விருப்பு, வெறுப்பு இன்றி கடமையைச் செய்!*

**செஞ்சமரில் பந்துசனம் சேதம் வரும் என்றுஇரங்கி
அஞ்சினவன் பயம் தீர்த்தே அமர்செய்யச் சொன்னவரோ.**

<u>பொருள்:</u>

அறப்போரில், (தர்மத்திற்கான யுத்தத்தில்) போரிட வந்திருக்கின்ற உறவினர்கள் அனைவரும், இந்த போரினால் மரணம் அடைவார்களே என்று மனம் இரங்கி, அச்சமடைந்த அர்ஜுனனது பயத்தை, அந்தப் போர்க்களத்திலேயே போக்க விரும்பிய பகவான், அவனைக் கருணையுடன் பார்த்து மரணமில்லா பெருவாழ்வை உபதேசிக்கத் தொடங்கினார்.

<u>விளக்கம்:</u>

இந்த தர்ம யுத்தத்திலே தன்னுடைய உறவினர்களையும் குருமார்களையும் கொல்வதினால் பாபம் வந்து சேரும். அவர்கள் இறப்பதினால் குலதர்மம் கெடும், சமூக ஒழுக்கம் கெடும்.

இவைகள் ஏற்படக் காரணமாக இருந்தவர்களுக்கு மறுமையில் நரகம் கிடைக்கும். இந்த போருக்குப் பிறகு

கிடைக்கும் ராஜ்ஜியமும் இரத்தம் தோய்ந்ததாக இருக்கும், என்றெல்லாம் சிந்தித்து, இரக்கத்தினால் அர்ஜுனன் பயத்தையும் மனக் கலக்கத்தையும் அடைந்தான்.

யுத்தம் செய்ய சக்தி அற்றவனாக தேர்த்தட்டில் அமர்ந்திருந்த அர்ஜுனனுக்கு அவனது மனக்குழப்பம் நீங்கி, அறிவுத் தெளிவுபெற வேண்டும் என்று விரும்பிய பகவான் ஸ்ரீ கிருஷ்ணன் குழப்பத்தை அடைந்திருந்த அர்ஜுனனுக்கு, புன்னகையுடன் *"சொந்த விருப்பு வெறுப்புகளுக்கு இடமின்றி, அறத்தின்படி அவரவர்கள் கடமையைச் சரியாகச் செய்பவர்கள் உயர்கதியான தேவர்களுக்கு நிகரான மரணமில்லா பெரு வாழ்வை அடைவார்கள்,"* என்று அர்ஜுனன் நிமித்தமாக அனைவருக்கும் கூற விரும்பி, இந்த கீதையை அருளிச் செய்கின்றார்.

<u>பாடல் 4</u>

*<u>கற்றறிந்த மெய்ஞ்ஞானிகள் மரணத்தைக் கண்டு அஞ்சார்!</u>*

**சுற்றம் அறில் சோகம் எனச் சொல்லினைச்சற்று அறிந்தவன்போல்**
**கற்றுஉணர்ந்த பேர்அதனால் கலங்கார்காண் என்றவரோ.**

**<u>பொருள்:</u>**

உறவினர்கள் அழிந்துப் போனால் துன்பம் – பாபம் – கவலை வரும் என்று, நன்கு கற்று அறிந்துக் கொண்டவனைப் போலப் பேசுகின்றாய். ஆனால், அவ்வாறு கற்று அறிந்துக் கொண்ட மெய்ஞானிகள் (மெய்ப்பொருளை உணந்தவர்கள்) மரணத்தைக் கண்டு மனம் கலங்கமாட்டார்கள் என்று அருளியவர் நீர்தானோ!

**<u>விளக்கம்:</u>**

அறத்தைக் காப்பது அரசனின் கடமை என்பதினாலே, அதிலே தன் சொந்த விருப்பு வெறுப்புகளை நுழைப்பது என்பது அறிவுடையவர்கள் செயல் ஆகாது. அதாவது, சொந்த விருப்பு வெறுப்புகளைப் பற்றிக்கொண்டு, தன் கடமை தவறுதல் என்பது அறியாமை ஆகும்.

*"உறவினர்களே கூட தர்மத்திற்கு விரோதமாக, எதிரிகளாக இருந்தால், அவர்களை விலக்குதல் என்பது பாபம் ஆகாது என்பது அறிவுடையவர் கருத்து".*

மேலும், உடல் என்பது இயற்கையின் நியதிப்படி அழியக் கூடியது, ஆன்மா ஒன்று மட்டுமே என்றும் அழிவில்லாதது. ஆகையால் அனைவரும் அழிவற்ற

ஆன்மாக்கள் என்பதினால், கற்றறிந்த மெய்ஞானிகள் இந்த உடலின் அழிவைக் குறித்து வருந்த மாட்டார்கள்.

<u>பாடல் 5</u>

*அர்ஜுனனின் கேள்வி :–*

**கலங்காரோ இறப்புவரில் கற்றுஉணர்ந்த பேரேனும்**
**மலங்காமல் நான்இருக்கும் வகைஉரையும் எனவினவ.**

<u>பொருள்:</u>

கற்றறிந்தவர்கள் மரணம் வந்தாலும் மனம் கலங்க மாட்டார்கள் என்றால், நானும் அவர்களைப் போன்று, சோகமின்றி மனம் மயங்காமல் இருக்கும் வழியை எனக்கு உபதேசித்து அருளுங்கள் என்று அர்ஜுனன் கேட்கின்றான்.

<u>பாடல் 6</u>

*கண்ணனின் பதில் :–*

*பிறப்பும் இறப்பும் கிடையாது.*

**நீயும்நானும் புவிமேல் நிருபர்களும் மெய்உணர்வால்**
**ஆயுங்கால் பிறந்துஇறப்பது ஆர்க்குமிலை என்றவரோ.**

**<u>பொருள்:</u>**

நீயும் நானும் மற்றும், இந்த பூமியிலுள்ள அரசர்களும், மற்ற யாவரும், பிறப்பதும், இறப்பதும் கிடையாது என்று அருளியவர் நீர்தானோ!

**<u>விளக்கம்:</u>**

உண்மையினை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, இந்த புவியினிலே யாரும், பிறப்பதும் இல்லை, இறப்பதும் இல்லை. இந்த தோற்றம் அனைத்தும் மனதினால் கற்பிக்கப்பட்ட தோற்ற மாயை எனலாம்.

காரணம், சீவர்களின் விழிப்பு, கனவு, மற்றும் ஆழ்ந்த உறக்கம் என்ற மூன்று அவஸ்தைகளிலே விழிப்பு நிலை கற்பனை உலகம் கனவு நிலையில் கிடையாது. அங்கு கனவு நிலையில் கற்பித்துக் கொண்ட உலகம் விழிப்பு நிலையில் கிடையாது. இத்துடன் ஆழ்ந்த உறக்க நிலையிலே இந்த கனவு உலகமும் இல்லை, நினைவு உலகமும் இல்லை, அங்கு அனைத்தையும் அறிய முடியாத அறியாமை அல்லவா இருந்தது. அப்பொழுது, எங்கே சென்றது இந்த உலகமும், உறவுகளும்? ஆகவே, இந்த மனதின் கற்பிதமே இந்த உலகமும், உடல்களும் ஆகும்.

எனவே, இங்கு யாரும் பிறப்பதும் இல்லை, இறப்பதும் இல்லை என்ற மிகப்பெரிய உண்மையை உபதேசிக்கத் தொடங்குகின்றார்.

பாடல் 7

*அர்ஜூனன் கேட்கின்றான்:– பிறவி யாருக்கு?*

**ஈங்கு எவர்க்கும் பிறந்துஇறப்பது இல்லையென்றீர் இவ்வுலகில்
நீங்குபவம் ஆர்க்குஇதனை நிச்சயமாய்ச் சொல்லுமென.**

பொருள்:

இங்கு எவர்க்கும் பிறப்பு, இறப்பு இல்லை என்று கூறினீர்கள், அப்படியானால், இந்த உலகத்தில் பிறப்பு, இறப்பு யாருக்கு உண்டு என்பதனை உறுதியாகச் சொல்லுங்கள் என அர்ஜுனன் கேட்கின்றான்.

பாடல் 8

*கண்ணனின் பதில் :– என்றுமுள்ள ஆத்மா நீ*

**இத்தரையில் பிறந்துஇறப்பது எடுத்தஉடற்கு அடுத்தபொறி
நித்தியம்ஆகிய ஆன்மா நின்சொரூபம் என்றவரோ.**

**பொருள்:**

இந்த பூமியில் பிறப்பது, இறப்பது என்பது, முற்பிறவின் கர்மபலனை அனுபவித்து தீர்ப்பதற்காக, உடலுக்கு உண்டான அடுத்தடுத்த நிகழ்வு ஆகும். என்றும் அழிவற்ற நித்தியமான ஆன்மாவே உன்னுடைய சொரூபம் என்று அருளிச் செய்தவர் நீர்தானோ!

**விளக்கம்:**

சூக்ஷ்ம உடலாகிய இருபது தத்துவங்களை கொண்ட மனம் என்ற சீவன், தன் புண்ணிய பாபத்தை அனுபவிப் பதற்காக இந்த ஸ்தூல உடலை எடுக்கின்றான்.

அத்தூல உடலுக்குத்தான் பிறப்பும், இறப்பும் உள்ளது. ஆனால், ஸ்தூலம் மற்றும் சூக்ஷுமம் ஆகிய இந்த இரு உடல்களுக்கும் ஆதாரமாக இருக்கின்ற ஆன்மா பிறப்பதும் இல்லை, இறப்பதும் இல்லை.

ஆன்மாவே என்றும் இருக்கின்ற ஒரே மெய்ப்பொருள். ஆன்மா மீது ஏற்றிவைக்கப்பட்ட கற்பிதமான, தற்காலிகமான தோற்றமே இந்த உடல்.

அதாவது, தங்கத்தைக் கொண்டு, அதன்மீது பலவாறான நகைகள் ஏற்றிவைத்துக் கொண்டு இருப்பதுப் போன்று, பிறப்பு, இறப்பு இல்லாத நித்தியமான ஆன்மாவே நமது யதார்த்த சொரூபம்.

ஆனால், அந்த ஆன்மாவின் மீது அறியாமையினால், இந்த உடலையும், உலகத்தையும் ஏற்றி வைத்துக் கொண்டு அபிமானிக்கின்றோம்.

<u>பாடல் 9</u>

*<u>அர்ஜுனன் கேட்கின்றான்:- நான் யார்?</u>*

**அங்கம்உயிர் இந்தி(ரி)யம் நான் அன்றிவேறு**
**எனைக்காணேன்**
**இங்குயான் வேறுஉண்டேல் எனக்குஅறியப் புகலுமென.**

<u>பொருள்:</u>

இந்த உடல், பிராணன், ஞான, கர்மேந்தியங்களான இவைகளே நான் என்பதன்றி, வேறு **'நானைக்'** காணவில்லை. இவ்வுடல் (முதலானவற்றை விட) வேறான **'நான்'** உண்டு என்றால், அதனை இங்கு நான் அறியும்படி விளக்க வேண்டும் என்று அர்ஜுனன் கேட்கின்றான்.

<u>**விளக்கம்:**</u>

**அறிவுப் பொறிகள் (5)** = மெய், வாய், கண், மூக்கு, செவி.

**செயற் பொறிகள் (5)** = கைகள், கால்கள், வாய், மல, ஜல உறுப்புகள்.

**பிராணன்கள் (5)** = பிராணன், அபானன், வியானன், உதானன், சமானன்.

**அந்தக்கரணங்கள் (5)** = மனம், புத்தி, சித்தம், அஹங்காரம், உள்ளம்.

இந்த ஞானேந்திரியங்கள் ஐந்தும், கர்மேந்திரியங்கள் ஐந்தும், வாயுக்கள் ஐந்தும், அந்தக்கரணங்கள் ஐந்தும், என இருபது தத்துவமும் சேர்ந்து, '**சூக்ஷும சரீரம்**' எனப்படுகின்றது. இந்த சூக்ஷும சரீரமே அனைத்து ஜீவராசிகளுக்கும் "**லிங்க சரீரம்**" எனப்படுகின்றது.

இந்த இருபது தத்துவங்களைக் கொண்டு உண்டான ஸ்தூல உடலாகிய, இந்த பரு உடலையே "**நான்**" என்று அபிமானிக்கின்றோம்.

அதன் அடிப்படையிலேதான், அர்ஜுனன் இந்த உடலைத் தவிர, மற்ற எந்த உடலையும் நான் காணவில்லை என்று இருக்கும் பொழுது, இதற்கு வேறான "நான்" என்ற ஏதாவது இருந்தால், அதை எனக்கு எடுத்துக் கூறுங்கள் என்று தனது சந்தேகத்தை பகவான் ஸ்ரீ கண்ணனிடம் கேட்கின்றான்.

<u>பாடல் 10</u>

*கண்ணனின் பதில் :–* அறிபவனே நீ!

**மெய்யுயிர் இந்தி(ரி)யங்கள் அல்லால் வேறுஅறியேன் என்றவனைப்**
**பைய அவை யால் அறியப் படானும்நீ என்றவரோ.**

<u>பொருள்:</u>

உடல், பிராணன், பொறிகள் இவைகள் அல்லாமல் வேறு அறியேன் என்று, அறிந்தவனும், அதேசமயம் புலன்களால் அறியப் படாதவனும் நீ என்றவரும் நீர்தானோ.

<u>விளக்கம்:</u>

எந்த அறிவைக்கொண்டு உடல், மனம், பிராணன் இவற்றை நீ அறிகின்றாயோ, அந்த அறிவே நீ. அதை விடுத்து, புறப்புலன்களான கண் முதலான இந்திரியங்களைக்

கொண்டு, ஒரு பொழுதும் ஆன்மாவைப் புறப்பொருள் போன்று அறியப்பட முடியாது.

அப்படி எந்த ஒரு – அறிவு – சைதன்யம் – உயிர் – ஆன்மா – உடலிற்கு வேறாக இருக்கின்றதோ? அதுவே உனது (நமது) உண்மையான "**நான்**" எனப்படுகின்றது. உடலுக்கு ஆதாரமாக இருப்பது அது மட்டும்தான்.

எது இருப்பதினால், இந்த உடல் இருக்கின்றதோ, எது இல்லையென்றால் இந்த உடல் இருக்காதோ, அதுவே ஆன்மா. அதுவே உண்மையில் "**நான்**" என்று கருதப்பட வேண்டியது, அறியப்பட வேண்டியது. அது உடலிற்கு வேறான தனித்த சொந்தமான இருப்புடையது. அறிவே வடிவமானது.

<u>பாடல் 11</u>

*<u>பிறப்பு எதனால்?</u>*

**தேகம் வேறு ஆகில் அதைச் சேர்ந்தது இவண் ஏதெனவே**
**சோகமே விளைகருமத் தொடர்ச்சியினால் என்றவரோ.**

<u>பொருள்:</u>

"இந்த உடல் எனக்கு வேறாக உள்ளது என்றால், இந்த உடலை அந்த ஆன்மா அடைந்தது எதனால்?" என்று அர்ஜுனன் கேட்க, "துன்பத்தைக் கொடுக்கின்ற வினைப் பயனின் விளைவால்" என்று அருளியவர் நீர்தானோ!

<u>விளக்கம்:</u>

இந்த உடல் ஆன்மாவாகிய எனக்கு வேறாக உள்ளது என்றால், இந்த உடலை "**நான்**" (ஆன்மா) அடைய வேண்டிய அவசியம் ஏன் வந்தது? என்று அர்ஜுனன் கண்ண பிரானை நோக்கிக் கேட்கின்றான்.

அதற்கு பகவான் ஸ்ரீ கண்ணனோ பின்வருமாறு கூறுகின்றார். பிறப்பு, இறப்பு என்ற இந்த சம்சாரம் துன்பம் உண்டாவதற்கு காரணமான இந்த உடல், பல்வேறு பிறவிகளாக இந்த சீவன் செய்த செயல் விளைவுகளின் மூலமாக உண்டாகியுள்ளது.

பாவ, புண்ணியங்களின் அடிப்படையில் ஏற்றி வைத்துக் கொண்ட பல்வேறு எண்ணங்களின் தொடர்ச்சியாக, அவைகளை அனுபவித்து தீர்க்க, இந்த சூக்ஷும மனம், ஸ்தூல உடலை எடுக்கின்றது.

## பாடல் 12

*முதல் வினைப்பயன் எப்படி உண்டானது?*

**தேகம்எடா முன்கருமச் செயல் வருமாறு ஏதெனவே**
**ஏகமா மரமும்வித்தும் எனும் முறைபோல் என்றவரோ.**

**பொருள்:**

உடல் எடுப்பதற்கு முன்பு, முன் வினைப்பயன் என்ற முதல் வினைப்பயன் எப்படி வந்தது? என்று அர்ஜுனன் கேட்க, ஒன்றாகிய மரமும் விதையும் எனும் முறை போல (முதலும் முடிவுமின்றி தொடரும் வட்டச்சுழற்சி) என்று அருளியவர் நீரோ! (ஜீவன் அனாதி என்பது இதன் கருத்து)

**விளக்கம்:**

இந்த ஸ்தூல உடல் எடுப்பதற்கு, முன் வினைப்பயன் காரணமாக இருந்தால், முதன் முதலாக உடல் எடுப்பதற்கு, முதல் வினைப்பயன் எப்படி உண்டானது? என்று அர்ஜுனன் கேட்கின்றான்.

பகவான் ஸ்ரீ கண்ணன் பின்வருமாறு விளக்குகின்றார்.

அதாவது, மரத்திலிருந்து விதை உண்டானதா?, அல்லது விதையிலிருந்து மரம் உண்டானதா? இதில் எது முதலில் உண்டானது என்ற கேள்விக்கு விடைக் கூறுவது சற்று கடினம். இருப்பினும், காரணம் இல்லாமல், காரியம் இல்லை.

எனவே, விதைக் காரணம், மரம் காரியம். ஆகவே, இது முதலும், முடிவும் இன்றி தொடரும் ஒரு வட்டச் சுழற்சி எனும் பொழுது, அவ்வாறே, வினையும், அந்த வினைக்கு உண்டான செயல் கருமத்தினால், உடலும் என காரண, காரியத்துடன் முடிவின்றித் தொடர்ந்துக் கொண்டே இருக்கும்.

பாடல் 13

*கர்மம் யார் செய்வது?*

**காயமும் தானும் பிரிதேல் கன்மம் எவர் செய்ததுஎனத்**
**தீயஉடற்(கு) அலதுகன்மச் செயல்தனக்(கு)ஏது என்றவரோ.**

பொருள்:

இந்த உடலும், ஆன்மாவாகிய தானும் வேறு வேறானால், கர்மம் யார் செய்தது? என அர்ஜுனன்

கேட்கின்றான். அதற்கு பகவான் ஸ்ரீ கண்ணன் பின்வருமாறு பதில் உரைக்கின்றார்.

கர்மச்செயல் (கர்ம வினைகள்) என்பது கொடிய தேகத்திற்கே அல்லாமல், தனக்கு (ஆன்மாவுக்கு) ஏது? என்றருளியவர் நீர்தானோ.

<u>**விளக்கம்:**</u>

இந்த உடலும், ஆன்மாவாகிய நானும் வேறு வேறாக இருக்கும் பொழுது, நல்வினை, தீயவினை என்ற கர்மங்களைச் செய்தது யார்? என்று அர்ஜுனன் கேட்க, பகவான் ஸ்ரீ கண்ணன் பின்வருமாறு கூறுகின்றார்.

அந்த நல்வினை மற்றும் தீவினை ஆகிய தொழில்கள், செயல்களைச் செய்யும் உடலுக்கே அன்றி, ஆன்மாவாகிய தனக்கு ஏது? அதனால், கர்ம வினைகள் எதுவுமே (ஆன்மாவுக்கு) தனக்கு வருவது கிடையாது என்கின்றார்.

## பாடல் 14

*கர்மபலனை அனுபவிப்பது யார்?*

**படர்கருமம் உடல்செய்யில் பலம்உறுவது ஆர்க் எனவே**
**அடர்பலமும் உடற்கேயாம் அறிவார்க்கு ஏது என்றவரோ.**

**பொருள்:**

பல்வேறு விதமாக நல்வினை, தீவினைகள் போன்ற கர்மங்களை இந்த உடல் செய்யுமானால், கர்மங்களின் பயனாக பாவ, புண்ணியங்கள் வந்து சேர்வது யார்க்கு? என அர்ஜுனன் வினவ, இடைவெளியில்லாமல் இவ்வாறு மாறி மாறி வருகின்ற அனைத்து கர்ம பலன்களும் உடலுக்கே ஆகும், அதை அறிபவனாகிய ஆன்மாவுக்கு ஏது? (சாட்சியாயிருக்கு ஆன்மாவுக்கு இல்லை) என்று அருளியவர் நீர்தானோ!

**விளக்கம்:**

நன்மை, தீமை கர்மாக்களை உடல் செய்வதாக இருப்பின், அதனால் உண்டாகின்ற பாவ, புண்ணியங்கள் யார்க்கு வருகின்றது? என்று அர்ஜுனன் கேட்க.

ஸ்தூல உடலையே நானென்று அபிமானம் கொள்கின்ற, சூக்ஷ்ம உடலில் இருக்கின்ற அகங்காரமாகிய சீவனே (மனமே), கர்மங்களைச் செய்கிறான். பிறகு அத்தகைய கர்மபலன்களை அனுபவிப்பவனும் அவனே, என்று பகவான் கூறுகின்றார்.

ஆன்மா இந்த இரண்டிற்கும் சாட்சியாக மட்டுமே இருக்கின்றது.

<u>பாடல் 15</u>

*<u>அர்ஜுனன் கேட்கின்றான்:–</u>*

*<u>சொர்க்கநரகம் அனுபவம் யாருக்கு?</u>*

**வெய்யவினை உடற்கென்றால் மெய்இங்கே விழஆன்மா**
**ஐயம்அற நரகசொர்க்கம் அனுபவிப்பது ஏதுஎனவே.**

<u>பொருள்:</u>

கொடிய வினைப்பயனானது உடலுக்குத் தானென்றால், உடலானது இறந்து, இங்கே பூமியிலேயே (மரண காலத்தில்) விழுந்துவிட, ஆன்மாவானது சந்தேகமின்றி

நரக, சொர்க்கங்களை அனுபவிப்பது எதனால்? என்று அர்ஜுனன் கேட்க.

**விளக்கம்:**

கொடிய வினைகளினால் உண்டாகும் பாவ, புண்ணியங்கள் உடலுக்குத்தான் என்றால், அந்த உடலோ இறந்த பின்பு, இங்கே இந்த பூமியிலேயே புதைக்கப்பட்டோ, அல்லது எரிக்கப்பட்டோ விடுகின்றது.

இந்த நிலையில் தனித்து நின்ற ஆன்மா மட்டுமே சந்தேகம் இல்லாமல், பாவத்தின் விளைவாக துன்பத்தை அனுபவிக்க நரகம் செல்வதும், புண்ணியத்தின் விளைவாக சொர்க்கம் செல்வதும் உண்டாகின்றது.

அப்படியிருக்க, அந்த ஆன்மாவானது நரக, சொர்கம் அனுபவிப்பது எதனால்? என்று அர்ஜுனன் சந்தேகம் கேட்கின்றான்.

**பாடல் 16**

*கண்ணனின் பதில் :–*

அனுபவிப்பது உண்மை இல்லை

**அனுபவமே இலைஅதுவீண் ஆரோபித நிகழ்த்தில்
தனுகரணச் செயல்தனதாய்ச் சார்வதுபோல் என்றவரோ.**

**பொருள்:**

ஆன்மாவிற்கு சொர்க்க நரகங்களில் அனுபவமே கிடையாது. ஆராய்ந்து பார்க்கின்ற பொழுது, எவ்வாறு அறியாமையின் காரணமாக, இந்த உடல் மற்றும் கை, கால்கள் முதலான கர்மேந்திரியங்களின் செயல்களை (ஆன்மாவாகிய) தன்னுடைய செயல்களாகக் கருதுவது போன்று, மனதின் வீணான கற்பிதமாகும் என்று அருளியவர் நீர்தானோ!

**விளக்கம்:**

உண்மையில் ஆன்மாவுக்கு சொர்கமும், நரகமும் அனுபவமே கிடையாது. அவ்வாறு ஆன்மா அனுபவிப்பதாகக் கருதுவது என்பது, மனதினால் ஏற்றி வைத்துக் கொண்ட கற்பிதம் என்றே கூற வேண்டும்.

அதாவது, ஸ்தூல உடலுக்கு வேறான, சூக்ஷ்ம உடலே (மனதின் வாயிலாக) சொர்க்க, நரகங்களை அனுபவிக்கின்றது.

ஆன்மா எங்கும் வியாபித்து ஆகாயம் போல் எப்பொழுதும் இருப்பது. மேலும், ஆன்மா ஸ்தூல, சூக்ஷும உடல்களுக்கு ஆதாரமாக இருப்பது. அதாவது, இந்த இரண்டிற்கும் வேறாக இருப்பது. அத்தகைய ஆன்மாவின் மீது, மாயையினால் இந்த உடல்கள் கற்பிக்கப்பட்டிருக்கின்றன.

அதாவது, கயிற்றின் மீது பாம்பு எப்படி அறியாமையினால் ஏற்றி வைத்துக் கொண்டு, பயப்படுவது என்பது எவ்வாறு மனதின் கற்பிதமோ? அவ்வாறே, அறியாமையினால் இந்த உடலையே **'நான்'** என்றும், அவற்றின் செயல்களை தன்னுடையது என்றும், நினைக்கின்ற அறியாமையே மனதின் மற்றொரு கற்பிதம் எனலாம்.

அறியாமையினால் இந்த சீவன், இந்த சொர்க்கம், நரகம் முதலானவைகளை **"நானே அனுபவிக்கின்றேன்"** என்று தவறாகவே கருதுகிறான். இது அறியாமையே அன்றி, உண்மை இல்லை. இது மாயையினால் உண்டான மனதின் மயக்கம் எனப்படுகின்றது.

## பாடல் 17

*உடலை நானென நினைப்பதேன்?*

**மற்றுஉடலின் செய்கை தன்மேல் வருமயக்கம் ஏதெனவே
முற்றுணர்வு ஒன்று இல்லாத மோகமென்று சொன்னவரோ.**

### பொருள்:

ஆன்மாவிற்கு வேறாக உள்ள இந்த உடலினது செயல்கள், ஆன்மாவாகிய தன்னிடத்தில் வரும் மயக்கத்திற்கு காரணம் என்னவென்று அர்ஜுனன் கேட்க, பூரண ஆன்ம ஞானம் இல்லாத அறியாமையே (அஞ்ஞானமே) காரணமென்று கூறியருளிய பகவான் நீர்தானோ.

### விளக்கம்:

இந்த உடலை நான் என்று அபிமானிப்பதும், இந்த உடல்களின் மாற்றங்களை (பருத்தேன், இளைத்தேன் போன்ற) என்னுடைய மாற்றங்கள் என்று எண்ணிக் கொள்வதுப் போன்ற மயக்கம் ஆன்மாவாகிய எனக்கு வருவதற்கு காரணம் என்ன? என்று அர்ஜுனன் கேட்கின்றான்.

பகவான் கண்ணன் பின்வருமாறு பதில் அளிக்கின்றார். முழுமையான ஆன்மஞானத்தை அடையாமல், இந்த உடலை **"நான்"** என்று மனம் மயங்குவது அறியாமையினால் மட்டுமே உண்டாகின்றது என்கின்றார்.

பாடல் 18

*அறிவு யாருக்கு?*

**அறிவு தேகம்தனக்கோ ஆன்மாவிற்கோ எனவே**
**பிரிவுசெயில் அசித்துஉடலம் பிரம்மம்அறிவு என்றவரோ.**

பொருள்:

அறியும் தன்மை உடலுக்கு உள்ளதா? அல்லது ஆன்மாவுக்கு உள்ளதா? என அர்ஜுனன் கேட்க, உடம்பையும் ஆன்மாவையும் பிரித்து ஆராய்ந்து பார்க்குமிடத்து, உடம்பு ஜடம் என்றும், பிரம்மம் (ஆன்மா) அறிவு வடிவம் என்றும் அருளியவர் நீர்தானோ!

விளக்கம்:

அறிவாகிய அறியும் தன்மையைக் கொண்டது, இந்த உடலா? அல்லது ஆன்மாவா? என்று அர்ஜுனன் கேட்க, பகவான் ஸ்ரீ கண்ணன் பின்வருமாறு பதில் உரைக்கின்றார்.

விசாரத்தினால், உடலையும், ஆன்மாவையும் பிரித்துப் பார்க்கின்ற பொழுது, இந்த ஸ்தூல உடல் ஜடம் என்பதினால் இது அறிவற்றது. ஆனால், ஆன்மாவோ, அறிவு சொரூபம். ஆகவே, ஆன்மாவாகிய பிரம்மம் மட்டுமே அறிவு சொரூபம் என்று விளக்கமளிக்கின்றார்.

## பாடல் 19

*ஜடமான உடல் செயல்படுவது எப்படி?*

**தேகம் அசித்து ஆகில் இந்தச்செயல் வருவது ஏதுஎனவே
ஏக பரஞ்சோதியின் முன் இருக்கையினால் என்றவரோ.**

பொருள்:

உடல் அறிவற்ற ஜடமானால், அதற்கு செயல்கள் உண்டாவது எப்படி? என்று அர்ஜுனன் கேட்க,

ஒன்றாகவும், மேலாகவும் உள்ள சைதன்ய (அறிவு) ஸ்வரூபமான ஆன்மாவின் முன்னிலையில், அந்த ஜடம் இருப்பதினால், இந்த உடலுக்கு இயங்கும் சக்தி உண்டாகின்றது என்று அருளிய பகவான் நீர்தானோ!

**விளக்கம்:**

ஸ்தூல உடல் பஞ்சபூதங்களால் ஆனது. ஆதலால் அது ஜடமானது. மேலும், இந்த பரு உடலுக்கு என்று சுய அறிவு கிடையாது. அது ஆன்மாவின் அறிவை (சைதன்யத்தை) எடுத்துக் கொண்டு மட்டுமே, தனக்கு அறிவு இருப்பதுப் போன்று காட்டிக் கொள்கின்றது.

இது எவ்வாறு எனில், உதாரணமாக, நாம் ஒரு முகம் பார்க்கும் கண்ணாடி முன்பு நின்றுக்கொண்டு ஒப்பனை செய்யும் பொழுது, உண்மையில் நாம் மட்டும்தான் அங்கு இருக்கின்றோம். ஆனால், கண்ணாடியில் ஒரு பிரதி பிம்பம் நம்மைப் போன்றே ஒப்பனை செய்வதைப் பார்க்கின்றோம்.

அது உண்மையில் ஜடம். ஆனால், இங்கு நாம் செய்கின்ற செயல்களை அது செய்வதுப் போன்று நமக்குத் தோற்றம் ஆகின்றது. ஆனால், அது உண்மை அல்ல, வெறும் தோற்றம் மாத்திரமே. அதாவது மாயத் தோற்றம் கண்ணாடி என்ற உபாதியினால் உண்டாகின்றது.

அவ்வாறே, ஆன்மா ஒன்று மட்டுமே இருக்கின்றது. அது, இந்த உடல் என்ற உபாதியின் வாயிலாக வெளிப்படும் பொழுது, செயல் செய்வதுப் போன்று தோன்றுகின்றது. ஆனால்,

உண்மையில் இதுவும் தோற்ற மாயை என்பதே இங்கு கூறவருகின்ற விசயம்.

ஆன்மா ஸ்வயம் சைதன்யமானது. அத்தகைய ஆன்மாவினுடைய சம்பந்தத்தினால் மட்டுமே இந்த உடலானது இருப்பையும், இயக்கத்தையும் பெறுகின்றது.

இருப்பினும், அந்த ஆன்மா எந்த செயலையும் செய்வதில்லை. செயல் செய்வதுப் போன்று, காணப்படுவது எல்லாமே இந்த சீவனின் (மனதின்) கற்பிதமே எனலாம்.

## பாடல் 20

*அதெப்படி எனில்...*

**இருக்கினும் அசேதனத்திற்கு இச்செயல் உண்டோ எனவே
உருக்குப்படாக் காந்தம் முன்னில் ஊசிநிகர் என்றவரோ.**

**பொருள்:**

அசையாத சேதனத்தின் முன்னிலையில் இருப்பதினால், இந்த ஜடமான உடலிற்கு செயல்கள் எப்படி உண்டாகும்? என்று அர்ஜுனன் கேட்க,

காந்தத்தின் முன்னால், ஊசியானது அசைவது போன்று அசைகின்றது என்று அருளிய பகவான் நீர்தானோ!

**விளக்கம்:**

ஜடமான இந்த உடலுக்கு, செயலற்ற சேதனத்தின் மூலமாக, பார்த்தல், கேட்டல், நுகர்தல், சுவைத்தல், தொடுதல் என்ற ஐந்தறிவுகள் உண்டாகி, அவைகளின் மூலமாக அனைத்தையும் அறிவது போன்ற செயல்கள் உண்டோ? என்று அர்ஜுனன் கேட்க.

பகவான் கண்ணன் பின்வருமாறு பதில் உரைக்கின்றார்.

அசைவற்ற காந்தத்தின் முன்பு, எவ்வாறு இரும்பு ஊசிகள் அசைகின்றனவோ, அவ்வாறே இந்த அறிவற்ற ஜடமான உடலுக்கு, அனைத்து செயல்களும் அந்த செயலற்ற பரம்பொருளின் சந்நிதானத்தில் நிகழ்கின்றது என்கின்றார்.

## பாடல் 21

*சுகதுக்கம் யாருக்கு?*

**சொன்னசெயல் உடற்கு ஆனால் சுகதுக்கம் யார்க்கு எனவே
அன்ன சுக துக்கமுந்தான் அவ்வுடற்கே என்றவரோ.**

**பொருள்:**

மேற்கூறிய செயல்களானது, இந்த உடலுக்கு என்று சொன்னால், இன்ப, துன்பங்களை அனுபவிப்பது யார்?, என்று அர்ஜுனன் கேட்க, அந்த இன்ப, துன்பங்களும் உடலுக்கே என்று அருளிய பகவான் நீர்தானோ!

**விளக்கம்:**

தாங்கள் கூறுவதுப் போன்று, அனைத்து செயல் களையும் இந்த உடல்தான் செய்கின்றது என்றால், அதனால், உண்டாகின்ற சுக, துக்கங்கள் யாருக்கு உண்டாகின்றது? என்று அர்ஜூனன் கேட்க, அதற்கு பகவான் ஸ்ரீ கண்ணன் பின் வருமாறு விடை பகிர்கின்றார்.

ஆன்மாவிற்கு என்று எந்த செயலும் இல்லாத பொழுது, அதற்கு என்று எந்த விதமான சுக, துக்கங்களும் கிடையாது. ஆனால், ஆன்மாவை முன் நிறுத்தி, இந்த உடல்கள் செயல்களைச் செய்யும் பொழுது, சுக, துக்கங்கள் இந்த உடலுக்குத்தான் உண்டாகின்றதே தவிர ஆன்மாவிற்கு அல்ல.

<u>பாடல் 22</u>

*அர்ஜுனன் கேட்கின்றான்:– ஜடமான உடலுக்கு எப்படி?*

**சேதனமாம் ஆன்மாவைச் சேராத துக்கசுகம்**
**ஓதுசடமாம் உடலை உற்றிடுமோ சொல்லுமென.**

<u>பொருள்:</u>

சைதன்ய வடிவமாகிய ஆன்மாவைச் சேராத இன்ப துன்பங்கள், ஜடம் என்று சொல்லப்பட்ட உடலை எப்படிச் சேரும் சொல்லுங்கள் என (அர்ஜுனன் கேட்க).

<u>விளக்கம்:</u>

அறிவு வடிவான சைதன்யமான ஆன்மாவைச் சேராத இன்ப, துன்பங்கள் எவ்வாறு அறிவற்ற இந்த சடம் (சடலம்) என்ற உடலைச் சேரும் இதனைச் சற்று எனக்கு விளக்கமாகக் கூறுங்கள் என்று அர்ஜுனன் கேட்கின்றான்.

<u>பாடல் 23</u>

*கண்ணனின் பதில் :–* இன்ப, துன்பம் மனதுக்கு!

**பூதம்ஐந்தோடு ஐந்துஉயிர்கள் புலன்கள்பத்து மனம்முதல் நான்கு**
**ஈது இருமெய் இதில்மனத்துக்கு இன்பதுன்பம் என்றவரோ.**

<u>பொருள்:</u>

ஆகாயம் முதல் ஐந்து பூதங்களும், பிராணன் முதலான ஐந்து வாயுக்களும், ஞானேந்திரியங்கள் கர்மேந்திரியங்களான புலன்கள் பத்தும், மனம் புத்தி சித்தம் அகங்காரம் என்ற அகக் கரணங்கள் நான்கும் (24 தத்துவங்கள்) ஆகிய இவைகள் அனைத்தும் ஸ்தூல, சூக்ஷும என்ற இரண்டு சரீரங்கள் ஆகும்.

இவற்றுள் சூக்ஷும மனம் என்ற ஓர் தத்துவமே இன்ப, துன்பங்களை அனுபவிக்கின்றது என்று அருளிய பகவான் நீர்தானோ.

<u>விளக்கம்:</u>

ஆகாசம், நெருப்பு, காற்று, நீர், நிலம் (5) என்ற ஐந்து பூதங்களும், பிராணன், அபானன், வியானன், உதானன், சமானன் (5) போன்ற ஐந்து வாயுக்களும், கைகள், கால்கள், வாய், மல, ஜல உறுப்புகள் (5) போன்ற கர்மேந்திரியங்கள் ஐந்தும், மெய், வாய், கண், மூக்கு, செவி (5) போன்ற ஞானேந்திரியங்களும் ஐந்தும், இத்துடன் மனம், புத்தி, சித்தம், அஹங்காரம் (4) என்ற அந்தக்கரணம் நான்கும் ஆக மொத்தம் இருபத்து நான்கு (24) தத்துவங்களில் பஞ்சீகரணம் செய்யப்பட்ட ஐந்து பூதங்கள் சேர்ந்தால் ஸ்தூல உடலாகவும்,

மற்ற 19 தத்துவங்கள் சூக்ஷும உடலாகவும், என மொத்தம் இருபத்து நான்கு (24) தத்துவங்களும் உள்ளன.

இவற்றில் கண்ணிற்குத் தெரியாத பத்தொன்பது (19) தத்துவங்களைக் கொண்ட சூக்ஷும உடலாகிய மனமே இன்ப, துன்பங்களை அனுபவிக்கின்றதே அன்றி, இந்த கண்ணிற்கு தெரிகின்ற பஞ்ச பூதங்களால் ஆன ஸ்தூல உடல் சுக, துக்கங்களை அனுபவிப்பது கிடையாது.

ஆன்மாவோ அசங்கன் என்பதினால் எதனுடனும் சம்பந்தப்படாத அவஸ்தா திரைய சாட்சி மாத்திரமாக அனைத்தையும் வேடிக்கை மட்டும் பார்த்துக் கொண்டுள்ளது.

ஆனால், சீவன் (மனம்) தன்னுடைய சங்கல்பங்களை (ஆசைகளை) அனுபவிப்பதற்காக இந்த ஸ்தூல உடலை எடுத்து, செய்கின்ற செயல்களின் வாயிலாக உண்டாகின்ற சுக, துக்கங்களை சூக்ஷும மனதினாலேயே அனுபவிக்கின்றதே தவிர ஸ்தூல உடலினால் கிடையாது.

## பாடல் 24

*இருவுடல்களுக்கும் காரணம் எது?*

**இந்த இருவகைத் தனுவிற்கு ஏது ஏது என வினவ**
**முந்தைய காரணம் அதனால் மூன்றுதனு என்றவரோ.**

### பொருள்:

இப்பொழுது கூறிய இந்த ஸ்தூல, சூக்ஷும வடிவான இரண்டு வகையான உடல்களுக்கும் காரணம் எது என்று அர்ஜுனன் கேட்க, இவ்விரண்டு உடல்களுக்கும் முதன்மையாய் உள்ள காரணம் அஞ்ஞானம் (அறியாமை) என்ற அந்த காரண சரீரம் ஒன்று இருத்தலால், அதன் காரணமாக இந்த மூன்று உடல்கள் என்றவரோ.

### விளக்கம்:

பூதங்கள் ஐந்தும் ஒன்றோடு ஒன்று கலந்து தோன்றியது ஸ்தூல சரீரம் என்ற இந்த பருவுடல். இத்துடன், கர்மேந்திரியங்கள் 5, ஞானேந்திரியங்கள் 5, பிராணன் 5, அகக்கரணங்கள் 4, ஆக 19 தத்துவங்கள் சேர்ந்தது சூக்ஷ்ம சரீரம் என்ற கண்ணிற்குத் தெரியாத நுண்ணுடல் இருக்கின்றது.

இதில் அறியாமையின் (அவித்யா) காரணமாக, இந்த சூக்ஷ்ம சரீரமாகிய மனம் தன்மீது ஏற்றி வைத்துக் கொண்ட பல்வேறு எண்ணங்களின் ஒட்டு மொத்த வடிவமாக இருந்துக் கொண்டு, இதன் இருப்பிடமான '**சஞ்சித கர்மா**' என்ற காரண சரீரத்தில் தன்னை அறிய முடியாத அறியாமையில் இருந்துக் கொண்டு அனைத்திற்கும் காரணமாக இருக்கின்ற சீவனாக வெளிப்படுகின்றது. ஆக, இந்த ஸ்தூல, சூக்ஷ்ம, காரண சரீரங்கள் என்ற மூன்றும் சேர்ந்ததே இந்த சீவசரீரம் கிடைக்கின்றது.

இதில் மனத்தில் ஆன்ம சைதன்யம் (அறிவு) பிரதி பிம்பிக்கின்ற பொழுது, இந்த அறிவற்ற சடமான உடல்கள் சேதனத்தன்மையை (அறிவை) பெறுகின்றன.

<u>பாடல் 25</u>

*<u>அர்ஜுனன் கேட்கின்றான்:- மனமும் ஜடம் அல்லவா?</u>*

**மனம்அறியும் துக்கசுக வரவு என்றீர் அம்மனமும்**
**வினவில் அசேதனம்அலவோ விரித்தெனக்கு விளம்பும் என.**

**<u>பொருள்:</u>**

வருகின்ற இன்பத் துன்பங்களை மனம்தான் அறிகின்றது என்று கூறினீர்கள், அந்த மனமும் ஆராய்ந்து பார்க்குமிடத்து (மற்ற தத்துவங்கள் போல) அறிவற்ற ஜடமானது அல்லவா? ஆக, அப்படிப்பட்ட மனம் இன்ப துன்பங்களை அனுபவிக்கும் விதத்தை எனக்கு விளங்கும் படியாக எடுத்து அருளுங்கள் என்று அர்ஜுனன் கேட்க.

**<u>விளக்கம்:</u>**

சுக, துக்கங்களை கண்ணிற்கு தெரியாத சூக்ஷும மனம்தான் அனுபவிக்கின்றது என்றால், 19 தத்துவங்களின் அடிப்படையில் பார்க்கின்ற பொழுது, அதுவும் அறிவற்ற ஜடம்தான். அப்படி இருக்க அந்த ஜடமான மனம் எப்படி இன்ப, துன்பங்களை அனுபவிக்க முடியும்? என்ற சந்தேகத்தை அர்ஜுனன் கண்ணபிரானிடம் கேட்கின்றான்.

**<u>பாடல் 26</u>**

*<u>கண்ணனின் பதில் :- ஆன்ம சம்பந்தத்தினால்</u>*

**அம்மனத்தில் ஆன்மா அபேதம்போல் தோன்றுதலால்**
**விம்முதுக்க சுகத்தை மனம் மேவும்என்று சொன்னவரோ.**

<u>பொருள்:</u>

ஜடமான அந்த மனத்தில் ஆன்மாவானது பிரதி பிம்பித்து, ஆன்மாவிற்கும், மனதிற்கும் வேறுபாடுகள் இல்லாதது போலத் தோன்றுவதால், கலக்கத்தை தருகின்ற துக்கத்தையும், சுகத்தையும் இந்த மனமானது அடைகின்றது என்று சொன்ன பகவான் நீர்தானோ!

<u>விளக்கம்:</u>

ஜடமான மனம் ஆன்மாவின் சம்பந்தத்தினால் சேதனத்துவத்தை (அறிவை) பெறுகின்றது. தான் அடைந்த சேதனத்துவத்தை உடலுக்குக் கொடுப்பதோடு, உடலின் மேல் அபிமானம் கொண்டு, உடலையே தான் என்று கருதுவதால், உடலின் சுக, துக்கங்களையும் தன்னுடையதாகக் கருதுகின்றது.

எவ்வாறு, கண்ணாடியில் ஏற்படுகின்ற பிரதிபிம்பம் அந்த கண்ணாடியில் தெரிகின்றத் தன் பிம்பத்தை தானாகக்கருதி, கண்ணாடியின் நன்மை தீமைகளை தன்னுடையதாகக் கருதுவது போன்றது இது கூறப்படுகின்றது. (அந்த பிரதி பிம்பத்திற்குக் காரணமான நிஜமுகம் கண்ணாடிக்கு வெளியே கண்ணாடிக்கு வேறாக இருக்கின்றது. அதனால், கண்ணாடியில் உண்டாகியுள்ள

அழுக்குகள் நிஜமான முகத்தை ஒருபொழுதும் பாதிப்பது இல்லை என்பதை அறிவதே இங்கு விவேகம்.)

<u>பாடல் 27</u>

*<u>அர்ஜுனன் கேட்கின்றான்:– ஆத்மா துக்கப்படுவது ஏன்?</u>*

**அந்தமனோ துக்கசுகம் அதனிடத்து நில்லாமல்**
**வந்துஇலங்கும் ஆன்மாவை மருவியதென் சொல்லுமென.**

<u>பொருள்:</u>

அப்படியானால், அந்த மனதிற்குரிய இன்ப, துன்பங்கள் அதனிடத்திலேயே நின்றுவிடாமல், சைதன்யமாகவும், அறிவு வடிவாகவும் விளங்குகின்ற ஆன்மாவை வந்து சேர்ந்தது எப்படி? என்று கூறுங்கள் என பகவானை அர்ஜுனன் கேட்க.

<u>பாடல் 28</u>

*<u>கண்ணனின் பதில் :– மனதின் சம்பந்தத்தினால்</u>*

**வெய்ய கனலின்சூடு மேல்வைத்த சட்டியினூடு**
**உய்யப் புனல் ஊடு வந்து அங்கு ஒன்றுதல்போல் என்றவரோ.**

<u>பொருள்:</u>

தகிக்கின்ற நெருப்பினிடத்துள்ள வெப்பமானது, அதன் மீது வைத்துள்ள சட்டியின் வழியே ஊடுருவி, அதில் ஊற்றி வைத்துள்ள நீரினிடத்தில் வந்து சேர்வதைப் போன்று, (மனத்திலுள்ள இன்ப, துன்பங்கள் அந்த மனத்தோடு சம்பந்தம் வைத்துள்ள ஆன்மாவை) பொருந்தியது என்றவரோ!

<u>பாடல் 29</u>

*அர்ஜுனன் கேட்கின்றான்:– சித்தும் சடமும் எப்படிச் சேரும்?*

**சித்தாகும் ஆன்மாவும் ஜடமாகும் சித்தமும்தான்**
**ஒத்தாங்கு இரண்டும் ஒன்றாய் உற்றவகை சாற்றுமென.**

<u>பொருள்:</u>

அறிவு வடிவேயான சைதன்யமான ஆன்மாவும், அறிவற்ற ஜடமான மனமும் ஆகிய இந்த இரண்டும் வேறுபாடு இல்லாதது போல, ஒன்றாய்ச் சேர்ந்த விதத்தை சற்று விளக்கமாகக் கூறுங்கள் என்று அர்ஜுனன் கேட்க.

## பாடல் 30

*கண்ணனின் பதில் :– நெருப்பும் இரும்பும் போல*

**வல்இரும்பு கனலுடனே மருவியது போல்மனமும்,**
**ஒல்லையில் ஆன்மாவுடனே உற்றதுகாண் என்றவரோ.**

**பொருள்:**

வலிமையான இரும்பானது தகிக்கின்ற கனலான நெருப்புடனே சேர்ந்து, அதன் ஒளியைத்தான் பெற்று பிரகாசிப்பதுப் போன்று, மனமும் அனாதியான ஆன்மாவுடனே சேர்ந்து சேதனத்துவம் (அறிவைப்) பெற்றிருக்கின்றது. இதனை அறிவாயாக என்று அருளியவர் நீர்தானோ.

## பாடல் 31

*ஆத்மா மனதுடன் சேர்ந்தது உண்மையா?*

**உற்றது எதனால் எனவே உள்ளம் அவிவேகமுறப்**
**பற்றியதன் மேலும் அதன் பண்புவந்தது என்றவரோ.**

**பொருள்:**

மனதின் தர்மங்களான சுக, துக்கங்கள் ஆன்மாவிற்கு இருப்பதாகத் தோன்றுவது எதனால்? என்று அர்ஜுனன் கேட்க,

மனதானது அறியாமையில் உள்ளதினால், (ஆன்ம ஞானத்தை அடையாததால்) ஆன்மாவாகிய தன்னிடத்தில் மனதின் பண்புகள் ஏற்றி வைக்கப்பட்டு தெரிகின்றன என்று அருளிய பகவான் நீர்தானோ!

<u>**விளக்கம்:**</u>

நெருப்பு பிரகாசமான ஒளிபொருந்தியது. அதற்கு என்று குறிப்பிட்ட வடிவம் ஏதும் இல்லாதது. இரும்பு வடிவம் உடையது, ஒளியற்றது. இரண்டும் வேறுவேறானவை.

ஆனால் நெருப்பும் இரும்பும் சேரும் பொழுது நெருப்பு உருவம் உடையது போலவும், இரும்பு பிரகாசம் உடையது போலவும் இரண்டின் தன்மைகளும் ஒன்றாகி, ஒரே பொருளாகத் தெரிகின்றது.

அதுபோன்றுதான், அறிவே வடிவான ஆன்மாவும் அறிவற்ற மனதும் ஒன்றுசேரும் பொழுது, மனது சேதனத் தன்மை (அறிவை) உடையதாகவும், ஆன்மா இன்ப, துன்பத்தை அடைந்ததாகவும் இரண்டும் ஒன்றாகித் தோன்று கின்றது. அதாவது, ஒன்றின்மீது மற்றொன்றின் குணம் ஏற்றி வைக்கப்பட்டுள்ளது. அதனால், அது உண்மையாகி விடாது.

## பாடல் 32

*இன்ப துன்பங்கள் ஆத்மாவுக்கு இல்லை!*

**அடுத்தகுணம் போமோபின் ஆன்மாவை விட்டெனவே**
**எடுத்த செம்பூ நிறம்படிகத்து ஏறுதல்போல் என்றவரோ.**

**பொருள்:**

ஆன்மாவை அடைந்துள்ள இன்ப துன்பங்கள் நீங்கிப் போகுமா? என்று அர்ஜுனன் கேட்க, சிவந்த நிறமுடைய பூவின் நிறம், அந்த பூவின் அருகே உள்ள ஸ்படிக கல்லில் ஏறி தோன்றுவது போல் என்றவரோ.

**விளக்கம்:**

சிவந்த பூவும், கண்ணாடி போன்ற ஸ்படிக லிங்கமும் அருகருகே இருக்கும் பொழுது, வெண்மையான, கண்ணாடி ஸ்படிக லிங்கம், அந்த பூவின் நிறத்தை ஏற்றுக் கொண்டு, சிவப்பு நிறத்தை அடைந்தது போலத் தோன்றும்.

அதுபோன்று, மனதையும், ஆன்மாவையும் பிரித்து ஆராய்ந்து பார்க்கின்ற பொழுது, ஆன்மா மனதின் இன்ப, துன்பங்களை தான் அடைந்து விட்டதாகத் தோன்றுகின்றது.

ஆனால், உண்மையில் ஸ்படிகமும், ஆன்மாவும் எப்பொழுதும் தங்கள் உண்மை சொரூபத்திலிருந்து மாற வில்லை என்பதே உண்மை. இதை ஆராய்ந்து அறிந்து கொள்வதே விவேகம் எனப்படுகின்றது. இதுவே அடைய வேண்டிய அருமையான ஞானம்.

## பாடல் 33

*அர்ஜுனன் கேட்கின்றான்:– ஆசைகள் தோன்றுவது எதனால்?*

**சுத்தபடிகம் போல் சொரூபமாய்த் தானிருக்க**
**மெத்தவும் ஆசாமலினம் மேவியதென் சொல்லுமென.**

பொருள்:

தூய்மையான ஸ்படிகம் போன்று, களங்கமற்ற சச்சிதானந்த சொரூபமாய்த் தான் (ஆன்மா) இருக்க, மிகுந்த ஆசைகளாகிய மலங்களினால், இந்த அழுக்கானது (ஆன்மாவாகிய) தன்னிடத்தில் வந்தது எப்படி? என்று அர்ஜுனன் கேட்கின்றான்.

<u>பாடல் 34</u>

*கண்ணனின் பதில் :– வாசனையால் வந்தது!*

**அனாதியாம் வாசனையால் அடைந்தது ஆசாமலினம்**
**மனோபந்தம் இருக்கில் முக்தி வாராது என்று உரைத்தவரோ.**

<u>பொருள்:</u>

ஆசையானது அனாதியான (தொடக்கம் தெரியாத) வாஸனையால் வந்திருப்பது. அதுவே மனதிற்கு பந்தமாம். அது இருக்கும்வரை முக்தியானது ஏற்படாது, என்று அருளிய பகவான் நீர்தானோ.

<u>பாடல் 35</u>

*அர்ஜுனன் கேட்கின்றான்:–* பந்தம் எது? முக்தி எது?

**பந்தம் எது முக்தி எது பகுத்துரைக்க வேண்டும் எந்தன்**
**சிந்தை தெளியவென்று திருத்தாளினை வணங்க.**

<u>பொருள்:</u>

பந்தம் என்பது என்ன? முக்தி என்பது என்ன? என்று எனது மனமானது தெளிவாகத் தெரிந்துக் கொள்ளும்படி,

(அவற்றின் இலக்கணங்களை) அதன் வித்தியாசத்தைப் பிரித்துக்கூற வேண்டும் என்று கேட்டவாறு (பகவானின்) திருவடிகளை வணங்கினான்.

**பாடல் 36**

*கண்ணனின் பதில் :– பந்தம் இது, முக்தி இது!*

**தேகாதி தான்எனவே சேர் அபிமானங்கள் பந்தம்**
**ஆகாத மானம்விடில் அரியமுத்தி என்றவரோ.**

**பொருள்:**

உடல், இந்திரியங்கள் முதலானவைகளை **"நான்"** என்பதாக கருதுகின்ற அபிமானமே (பற்றுதலே) பந்தமாகும். இத்தகைய **"நான்"**, **"எனது"** என்கின்ற துன்பத்தைத் தருகின்ற அபிமானத்தை விட்டுவிட்டால், அதுவே கிடைத்தற்கு அரிதான **"முக்தி"** என்று அருளிய பகவான் நீர்தானோ.

## பாடல் 37

*அர்ஜுனன் கேட்கின்றான்:– அபிமானம் வந்ததெப்படி?*

**அபிமானம் வரும் வகையும் ஆங்கு அதனைத் தீர்வகையும்
தபியாமல் நானறியத் தயவாகக் கூறுமென.**

பொருள்:

உடல் நானென்ற அபிமானம் வந்து சேருகின்ற வழியையும், அந்தத் தவறான அபிமானம் நீங்குவதற்குரிய வழியையும், இந்த அபிமானத்தால் உண்டாகிய துன்பத்தை தீர்க்கின்ற வழிமுறைகளையும், நான் தெரிந்து கொள்ளக் கருணையோடு, எனக்கு எடுத்துக் கூறுங்கள் என்று அர்ஜுனன் கேட்கின்றான்.

## பாடல் 38

*கண்ணனின் பதில் :– அறியாமையால் வந்தது!*

**மறந்திடும் அஞ்ஞானத்தால் மானம் வந்தது அஞ்ஞானம்
இறந்துவிடின் மானமும் போம் என்ன உரைசெய்தவரோ.**

**பொருள்:**

தனது ஆன்ம வடிவத்தை மறந்த அஞ்ஞானத்தினால், அபிமானம் வந்தது. அந்த அஞ்ஞானம் அழிந்துவிட்டால் அதன் காரியமான உடற்பற்றும் அழிந்துவிடும் என்று அருளிய பகவான் நீர்தானோ.

**விளக்கம்:**

ஆவரண சக்தி என்ற மறைக்கும் சக்தியின் காரணமாக இந்த சீவன் தன் உண்மை சிவ சொரூபத்தை மறந்துவிட்டு, அறியாமையினால், இந்த "**நான்**", "**எனது**" என்ற உடல் அபிமானத்தை உண்டாக்கிக் கொண்டான்.

அந்த அறியாமையை நீக்க, தக்க சத்குவின் சந்நிதியில், தன் உண்மைச் சொரூபத்தை அறிவிக்கும் தத்துவ ஞானத்தை அடையும் பொழுது மட்டுமே, அறியாமைக்கு காரணமான இந்த உடலை "**நான்**" என்று கருதுவதும், உறவுகளையும் உலகத்தையும் "**எனது**" என்று கருதுவதும், முற்றிலுமாக அழிந்துவிடும், என்று பகவான் ஸ்ரீ கண்ணன் எடுத்துக் கூறுகின்றார்.

## பாடல் 39

*அர்ஜுனன் கேட்கின்றான்:- அறியாமை வருவதும் போவதும் எப்படி?*

**அந்தமுறை அஞ்ஞானம் அணுகுவதும் போவதுவும்**
**சந்தயமில்லாது அறியத் தயவாகக் கூறுமென.**

**பொருள்:**

என் உண்மை சொரூபத்தை மறைக்கும் விதமாக அஞ்ஞானமானது வந்து சேர்வதும், அழிந்து போவதும் எப்படி? என்று எனக்கு ஐயம் இல்லாமல், நான் அறிந்து கொள்ளும்படி கருணையுடன் கூறி அருளுங்கள் என அர்ஜுனன் கேட்கின்றான்.

## பாடல் 40

*கண்ணனின் பதில் :- மெய்யறிவால் போகும்!*

**அஞ்ஞானம் வந்தது அனாதி அது சொல்வதல்ல**
**மெய்ஞானத்தாலே விடுமென்று உரைத்தவரோ.**

**பொருள்:**

அஞ்ஞானம் இந்த ஒரு காரணத்தால்தான் வந்தது என்று சொல்வதற்கில்லை, அது அனாதியானது (தொடக்கம் தெரியாதது). ஆனால், மெய்ப்பொருளைப் பற்றிய மெய் ஞானத்தால் மட்டுமே அது நீங்கும் என்று உரைத்தருளிய பகவான் நீர்தானோ!

**பாடல் 41**

*அர்ஜுனன் கேட்கின்றான்:– சூரியன் முன் இருள் வருமா?*

**இரவி எதிர் அடுத்துவந்த இருள்போல அஞ்ஞானம்**
**வரவிதியோ சோதிதன்பால் வந்தவகை ஏதெனவே.**

**பொருள்:**

சூரியனின் எதிரில் நெருங்கிவந்த இருள்போல, ஞானசூரியன் ஆகிய என்னிடத்தில் (ஆன்மாவிடத்தில்) அஞ்ஞானமானது வருவதற்கு இயலுமோ? வந்த வகை எப்படி யென்று சொல்லுங்கள் என்று அர்ஜுனன் கேட்கின்றான்.

**விளக்கம்:**

சூரியனின் எதிரிலே இருள் வரமுடியுமா?, அது என்றுமே சாத்தியமில்லை. அதுப்போன்று, ஆன்மஞான சூரியனாக இருக்கின்ற என்னிடத்திலே, இந்த அறியாமை என்ற இருள் வரமுடியுமா? அப்படி அது வந்திருக்கின்றது என்றால், அது வந்த வகை எவ்வாறு என்று, எனக்கு எடுத்துக் கூறுங்கள் என்று அர்ஜுனன் பகவான் கண்ணனைப் பார்த்துக் கேட்கின்றான்.

**பாடல் 42**

*கண்ணனின் பதில் :– ஆனந்த சாகரம் நீ*

**அந்த அறிவு வந்தால் அஞ்ஞானம் இல்லை அப்பால்**
**சந்நதமும் ஆனந்த சாகரம்காண் என்றவரோ.**

**பொருள்:**

இந்த உடல் முதலானவைகளைவிட வேறாகிய ஞானப் பிரகாச வடிவம் மட்டுமே **"நான்"** என்னும் மெய்ஞ்ஞானம் உனக்கு உண்டாகி விட்டால், அஞ்ஞானமானது உன்னிடத்தில் இல்லாததே ஆகும். அந்த ஞானம் தோன்றிய

பிறகு எப்பொழுதும் நீ ஆனந்தக் கடலாய் இருப்பாய் என்று அருளிய பகவான் நீர் தானோ.

விளக்கம்:

சூரியன் வரும் வரையே இருள் இருக்கும். சூரியன் தோன்றியவுடன் இருள் மறைந்துவிடுவது போன்று, நான் ஆன்மா என்று அறியாதவரையே அஞ்ஞானம் இருக்கும். '**நான் சச்சிதானந்தமான பூரண ஆன்மா**' என்று அறிந்து கொண்ட பிறகு அஞ்ஞானம் கிடையாது. அதன்பிறகு என்றும் இருக்கின்ற அறிவு வடிவான ஆனந்தக் கடலாகவே இருக்க முடியும்.

பாடல் 43

*அர்ஜுனன் கேட்கின்றான்:– துக்கசுகம் தீராதது ஏன்?*

**வேதாந்தத்தால் குருவால் மெய்ஞானம் வந்தவுடன்
தீதான துக்கசுகம் தீராதது ஏதெனவே.**

பொருள்:

வேதாந்த நூல்களை கேட்டலாலும், படித்தாலும், சத்குருவின் உபதேசத்தாலும் மெய்யறிவு உண்டானாலும்,

கொடியதான இன்ப, துன்பங்கள் ஒழியாதது எதனால் என்று அர்ஜுனன் கேட்கின்றான்.

<u>விளக்கம்:</u>

வேதாந்தம் எனப்படுகின்ற உபநிஷதங்கள், பிரம்ம சூத்திரம் போன்ற அனேக ஆன்ம விசார தத்துவ நூல்களை சத்குரு முகமாக கேட்பதின் வாயிலாகவே ஆன்ம ஞானமானது உண்டாகும். அப்படிக் கேட்கின்ற பொழுது, அவைகளைப் புரிந்துக் கொண்டாலும், அதனுடைய பலனை முழுமையாக அனுபவிக்க முடியாமல் இருப்பது எதனால்? என்று அர்ஜுனன் கேட்கின்றான்.

<u>பாடல் 44</u>

*<u>கண்ணனின் பதில் :– அபரோக்ஷ ஞானத்தாலே நீங்கும்!</u>*

**பற்று அறுமோ துக்கசுகம் பரோக்ஷ ஞானத்தாலே**
**அற்றமாம் அவ்விரண்டும் அபரோக்ஷத்தாலே என்றவரோ.**

<u>பொருள்:</u>

பரோக்ஷ ஞானத்தினால் (அதாவது, கேள்விப்பட்ட ஞானத்தினாலே) இன்ப, துன்பங்கள் உண்டாவது

முற்றிலுமாக நீங்கி விடாது, அவ்விரண்டும் அபரோக்ஷ ஞானத்தாலேயே (அனுபவ அறிவாலேயே) நீங்கும் என்றருளிய பகவான் நீர்தானோ.

**விளக்கம்:**

பரோக்ஷ ஞானம் என்ற கேள்வி ஞானம் விஷய அறிவாக மட்டும் இருக்கின்றபொழுது, அது முழுமையான பலனைத் தருவது இல்லை. எவ்விதமான தடைகளும் இன்றித் தன்னறிவாகவே, (அபரோக்ஷ ஞானத்தாலேயே) தன் அனுபவமாகவே, அது புரிந்துக் கொள்ளப்படுகின்ற பொழுது மட்டும்தான் முழுமையானப் பலனைத் தரும்.

**பாடல் 45**

*அர்ஜுனன் கேட்கின்றான்:–*

*பரோக்ஷம் எது ? அபரோக்ஷம் எது ?*

**பரோக்ஷம் அபரோக்ஷம் எது பகுத்துரைக்கவேண்டும் என்தன்**
**திரோதமாம் புத்தி நன்றாய்த் தெளியும் படிக்கெனவே.**

**<u>பொருள்:</u>**

பரோக்ஷஞானம் என்பது யாது? அபரோக்ஷஞானம் என்பது யாது? அறியாமையால் மறைக்கப்பட்டுள்ள என்னுடைய அறிவுவானது நன்றாகத் தெளியும்படி பிரித்து கூற வேண்டும் என்று அர்ஜுனன் கேட்கின்றான்.

**<u>பாடல் 46</u>**

*கண்ணனின் பதில் :–* பரோக்ஷம் இது, அபரோக்ஷம் இது!

**கர்ந்த சத்தஞானம் பரோக்ஷம் அனுபவத்தால்**
**அகம்பிரம்மம் எனும் ஞானம் அபரோக்ஷம் என்றவரோ.**

**<u>பொருள்:</u>**

வேதாந்த நூல்களாலும் சத்குருவாலும் சொல்லப்பட்ட ஆன்மா, ப்ரஹ்மம் போன்ற சப்தங்களின் (சொற்களின்) பொருளறிவு வெறும் '**பரோக்ஷ ஞானம்**' என்ற கேள்விப்பட்ட அறிவு மட்டுமே ஆகும்.

தத்துவமசி, அகம்பிரம்மாஸ்மி போன்ற மகா வாக்கியங்களின் விசாரத்தால் (ஆராய்ச்சியால்) உண்டாகும்

**"நான் பிரம்மமாக இருக்கிறேன்"** என்னும் அநுபவ உணர்வு **'அபரோக்ஷ ஞானம்'** என்று அருளிய பகவான் நீர் தானோ!

**விளக்கம்:**

உடலுக்கு வேறாக ஆன்மா இருக்கின்றது என்றும், உலகத்திற்கு வேறாக பிரம்மம் (கடவுள்) இருக்கின்றது என்றும் விசாரித்து அறிந்துக் கொள்வது என்பது, **"பரோக்ஷ ஞானம்"** எனப்படுகின்றது.

பிரம்மமே ஆன்மாவாக இருக்கின்றது, அந்த ஆன்மாவே **"நான்"** என்று அனுபவமாக தன் சொரூபத்தை அறிந்து, அதனுடன் இரண்டற்று ஒன்றி விடுவது **"அபரோக்ஷ ஞானம்"** எனப்படுகின்றது.

**பாடல் 47**

*அர்ஜுனன் கேட்கின்றான்:– உடற்பற்று போகாதது ஏன்?*

**தான் பிரம்மம் என்றறிந்தும் தனுவைத்தான் என்ற புத்தி,**
**ஏன் போகவில்லை அதை எனக்கறியப் புகலுமென.**

**பொருள்:**

நான் பிரம்மம் என்று அறிந்த பிறகும் உடல் முதலானவைகளை '**நான்**' என்று எண்ணும் (தவறான) அறிவு ஏன் நீங்கவில்லை, அது நீங்குவதற்கான காரணத்தை எனக்கு நன்கு அறியுமாறு தாங்கள் திருவாய் மலர்ந்தருள வேண்டு மென்று அர்ஜுனன் கேட்கின்றான்.

**பாடல் 48**

*கண்ணனின் பதில் :– பயிற்சியினால் நீங்கும்*

**கேள்வியினால் மனனத்தால் கிளர்ந்த யோகங்களினால்**
**ஆள்பிரம்மத்து அனுபவம்வந்து அதுதீரும் என்றவரோ.**

**பொருள்:**

சத்குருவின் வாயிலாக வேதாந்த நூல்களைக் கேட்பதனாலும், அவற்றின் பொருளைச் சிந்தித்து ஐயங்களை தெளிவுபடுத்திக் கொள்வதனாலும், தெளிவாக அறிந்து கொண்ட அந்தத் தத்துவஞானத்திலேயே மனதைத் தொடர்ந்து நிறுத்துவதினாலும் நான் பிரம்மம் என்ற ஞானமானது மனதில் உறுதிப்படும் பொழுது, பழைய வாஸனையான உடல் நானென்பது முற்றிலுமாக நீங்கும்.

**பாடல் 49**

*அர்ஜுனன் கேட்கின்றான்:–*

*நான் ஞானவடிவம் ஆக முடியுமா?*

**ஆதியாம் சித்சொரூபம் ஆகாத தான் இனிமேல்**
**சோதிமனன் ஆதியினால் சொரூபம் ஆமோ எனவே.**

**பொருள்:**

முதலில் சித்சொரூபமாக (அறிவு சொரூபமாக) இல்லாத **"நான்"** தற்பொழுது வேதாந்த சாஸ்திர விசாரத்தை ஏற்படுத்திக் கொள்கின்ற காரணத்தினால், சிரவணம், மனனம், நிதித்யாஸனம் (கேட்டல், சிந்தித்தல், நடைமுறைப்படுத்துதல்) போன்றவைகளினால் சித் (அறிவு) ஸ்வரூபமாக ஆக முடியுமா? என அர்ஜுனன் கேட்கின்றான்.

**பாடல் 50**

*கண்ணனின் பதில் :– எப்போதும் ஞானவடிவுதான் நீ*

**எப்போதும் சின்மயம்தான் எனல் மறந்து தேடுவது**
**செப்புமிடற்று அணியிருக்கத் தேடுதல்போல் என்றவரோ.**

<u>பொருள்:</u>

எக்காலத்திலும் தான் சித்சொரூபம்தான் (அறிவு சொரூபம்) என்பதை மறந்து, அதை அடைய வேண்டும் என்று தேடுவது, கழுத்திலேயே நகையை அணிந்து இருக்கும் பொழுது, அதை மறந்து, வெளியே வேறு எங்கோ தேடுவதுப் போன்று உள்ளது என்றவரோ.

<u>பாடல் 51</u>

*அர்ஜுனன் கேட்கின்றான்:- நான் நானாவேனா?*

**தேடியபின் தேகபுத்தி தீர்ந்துபோய் சித்சொரூபம்**
**கூடுவனோ யான்என் குறை தீரச் சொல்லுமென.**

<u>பொருள்:</u>

கேட்டல், சிந்தித்தல் போன்ற வேதாந்த நூல்களை விசாரங்களினால் (நான் யார்? என்று) ஆராய்ந்த பின்பு, உடல் நான் என்னும் தவறான அறிவு நீங்கிப் போய், அவற்றை **"அறியும் அறிவே நான்"** என்று அந்த சித் சொரூபத்தை அடைவனோ? என் ஐயம் தீர உபதேசியுங்கள் என்று அர்ஜுனன் கேட்கின்றான்.

<u>பாடல் 52</u>

*<u>கண்ணனின் பதில் :– நானாயிருப்பதில் ஐயமென்ன?</u>*

**வந்தஉடல் வேறாயும் வாசனையால் தானெனலால்**
**சந்தயம் என்தன் சொரூபம் தான்ஆதற்கு என்றவரோ.**

<u>பொருள்:</u>

வினைப்பயன்களால் உண்டான இந்த உடல், தனக்கு வேறாக இருந்தாலும், உடலை நானென்று வாழ்ந்த பழைய வாசனைகளினால், இப்பொழுதும் அந்த உடலையே தான் என்று அபிமானிக்கத் தோன்றுகின்றது. வாசனைகளை நீக்கி, உடலை அறிகின்ற ஆன்மாவே தன் உண்மை சொரூபம் என்று, தன்னில் தானாய் நிற்பதில் ஐயம் என்ன?

<u>பாடல் 53</u>

*<u>அர்ஜுனன் கேட்கின்றான்:– உடல்மயக்கம் நீங்குவது எப்படி?</u>*

**தனுவைத்தான் எனும் பிரமை சத்தஞானத்தில் அறாது**
**அனுபவ மெய்ஞ்ஞானத்தால் அறும் வகைஏது உரையுமென.**

**பொருள்:**

உடலை நான் என்று நினைக்கும் மயக்கமானது சாஸ்திர விசாரணையால் உண்டான பரோக்ஷ ஞானத்தால் (கேள்வி ஞானத்தினால்) நீங்காமல், உண்மை அனுபவம் ஆகிய அபரோக்ஷ ஞானத்தால் நீங்குகின்ற விதம் எப்படி சொல்லுங்கள் என்று அர்ஜுனன் கேட்கின்றான்.

**பாடல் 54**

*கண்ணனின் பதில் :–*

*ஐயமின்றிய அறிவொளியினால் தொலையும்*

**விளக்குவிளக்கு எனும் அதனால் வெய்யஇருள் போய்விடுமோ**
**துளக்கம்இலா விளக்கேற்றில் தொலையும்இருள் என்றவரோ.**

**பொருள்:**

விளக்கு விளக்கு என்று சொல்வதினால் மட்டும் கொடிய இருள் நீங்கி விடுமோ? (நீங்காது). அசைவின்றி எரிகின்ற விளக்கேற்றினால் இருளானது நீங்கிப் போகும் என்றருளிய பகவான் நீர்தானோ.

**விளக்கம்:**

விளக்கு, விளக்கு என்று வெறும் வாய் வார்த்தையினால் கூறுவதினால், கடும் இருள் நீங்கி, வெளிச்சம் வந்து விடுமா? வராது அல்லவா? அத்குவே, அசையாத தீபத்தை ஏற்றி வைக்கின்ற பொழுது, அங்குள்ள கடும் இருள் நீங்கி, பிரகாசமான வெளிச்சம் வந்து விடுமன்றோ.

அதுபோல, பிரம்மம் இருக்கின்றது என்றும், அந்த பிரம்மமாகவே நான் இருக்கின்றேன் என்றும் ஏற்றி வைத்துக் கொண்ட பரோக்ஷ ஞானத்தினால் (கேள்வி ஞானத்தினால்) மட்டும், இந்த உடல் நான் என்ற அபிமானம், நீங்கி, அறிவு பிரகாசிக்காது.

அந்த பிரம்மமே அறிவு வடிவாக, எங்கும், எதிலும் எப்பொழுதும் பிரகாசித்துக் கொண்டுள்ளது, அத்தகைய அறிவு வடிவாகிய ஆன்மாவாகவே (நானாக) எங்கும் விளங்கிக் கொண்டிருக்கிறது என்ற அபரோக்ஷ ஞானத்தினால்தான் (அனுபவ ஞானத்தினால்) உடல் அபிமானமானது நீங்கும்.

<u>பாடல் 55</u>

*அர்ஜுனன் கேட்கின்றான்:– அஞ்ஞானம் எப்போது நீங்கும்?*

**நெடுங்காலம் ஆன்மாவை நீங்காத அஞ்ஞானம்**
**விடுங்காலம் எந்நாளோ மெய்ஞ்ஞானத்தால் என்றவரோ.**

<u>பொருள்:</u>

அனாதி காலமாய் ஆன்மாவை மறைத்து இருக்கின்ற அஞ்ஞானமானது ஆன்மாவை விட்டு நீங்குவது எப்பொழுது? என்று அர்ஜுனன் கேட்க, ஆன்மாவைப் பற்றிய மெய் ஞானத்தினால் மட்டுமே அது விலகும் என்று உபதேசித்து அருளிய பகவான் நீர்தானோ!

<u>பாடல் 56</u>

*கண்ணனின் பதில் :– மெய்ஞ்ஞானத்தால் நீங்கும்!*

**அந்தகாரம் குகையில் ஆயிரம்நாள் இருந்தாலும்**
**செந்தீபம் கண்டவுடன் தீர்வதுபோல் என்றவரோ.**

**பொருள்:**

இருளானது ஒரு குகையில் ஆயிரக்கணக்கான நாட்கள் இருந்தாலும், ஒரு விளக்கை ஏற்றியவுடன், அதன் பிரகாசமான வெளிச்சத்தால் இருள் மறைந்து போய்விடும் என்று அருளிய பகவான் நீர்தானோ!

**விளக்கம்:**

கடும் இருள் பல ஆயிரக்கணக்கான நாட்கள் ஒரு குகையில் இருந்தாலும், அங்கு ஒரு தீபத்தை ஏற்றியவுடனே, அந்த இருள் உடனடியாக மறைந்து, அங்கு பிரகாசமான வெளிச்சம் வந்து விருவதுப் போன்று, அனாதி காலமாய் ஆன்மாவை மறைத்திருக்கும் அறியாமையானது, இந்த சாஸ்திர விசாரத்தினால், உடனடியாக, அகன்று, மெய்ஞ்ஞானம் உண்டாகிவிடும். இந்த மெய்ஞ்ஞானம் உண்டான மறு விநாடி அறியாமை என்பது, இருந்த இடம் தெரியாமல் நீங்கி விடும் என்று இங்கு கூறப்படுகின்றது.

## பாடல் 57

*அர்ஜுனன் கேட்கின்றான்:- அஞ்ஞானம் தவத்தால் நீங்காதா?*

**கருமயோகம் தவமே காரணமா நீங்காமல்**
**அருமையா ஞானம் வந்தோ அஞ்ஞானம் போம் எனவே.**

### பொருள்:

அறியாமை என்பது, பூசை, யாக, யக்ஞங்கள், தவம் போன்றவைகளை செய்கின்ற காரணங்களினால் நீங்காமல், மெய்ஞ்ஞானம் வந்தவுடன் அறியாமை போய்விடும் என்பது எப்படி என்பது எனக்கு சற்று எடுத்துக் கூறுங்கள் என்று அர்ஜுனன் கேட்கின்றான்.

### விளக்கம்:

கர்ம யோகம் எனப்படுவது, ஆசைக்கும், விருப்பு, வெறுப்புக்கும் இடம் கொடுக்காமல், நாம் செய்கின்ற செயலுக்கு, 'நான் செய்கிறேன்; எனக்காகச் செய்து கொள்கிறேன்' என்கிற அகம்பாவம் இல்லாமல் கடமையைச் செய்து, பலனை ஈசுவரனுடைய பாதத்தில் அர்ப்பணம் பண்ணுவதுதான் கீதை சொல்கின்ற கர்மயோகம். அந்த கர்ம யோகத்தினாலும், பிற உயிர்களை துன்புறுத்தாமல், அஹிம்சை வழியிலே தவ வாழ்க்கை வாழ்வதாலும், நீங்காத இந்த அறியாமை,

மெய்ஞ்ஞானம் வந்தவுடன் போகும் என்பது எப்படி? என்று அர்ஜுனன் கேட்கின்றான்.

## பாடல் 58

*கண்ணனின் பதில் :–* கர்மம் ஞானத்திற்கு உதவாது!

**குத்துவெட்டும் படைகளினால் கூடுமோ இருள் துரக்க**
**உத்தமம் ஆம் ரவி உதித்தால் ஓடும் இருள் என்றவரோ.**

**பொருள்:**

குத்தவும், வெட்டவும் பயன்படுகின்ற படைக் கருவிகளைக் கொண்டு இருளினை நீக்க முடியுமா? அதுவே, சூரியனுடைய உத்தமமான வெளிச்சம், பிரகாசமாக வெளிப்பட்டவுடன் இருள் இருந்த இடம் தெரியாமல் ஓடிவிடும் என்று அருளிய பகவான் நீர்தானோ!

## பாடல் 59

*அர்ஜுனன் கேட்கின்றான்:–*

*கர்மம் ஞான சாதனமாவது எப்படி?*

**அஞ்ஞான இருள்துரக்க அறியாத நல்லகன்மம்**
**மெய்ஞானம் தனைப்பலிக்கும் விதம் எவ்வாறு எனவினவ.**

<u>பொருள்:</u>

அஞ்ஞானமாகிய (அறியாமை) இருளை நீக்குவதற்கு இயலாத, நல்ல செயல்களான கர்மங்கள் எனக்கு உதாவாதபோது, மெய்ஞானத்தை உண்டாக்குகின்ற உன்னத செயல் எது? என்று எனக்கு எடுத்துக் கூறுங்கள் என அர்ஜுனன் கேட்கின்றான்.

<u>பாடல் 60</u>

*<u>கண்ணனின் பதில் :– இவ்வுலகம் உண்மையல்ல!</u>*

**இந்திர சாலம்போல இவ்வுலகை நம்மிடத்தில்**
**தந்திரமாய்த் தோற்றுவித்தோம் சத்தியம்அல என்றவரோ.**

<u>பொருள்:</u>

இந்திரசாலம் செய்கின்ற மந்திரவாதியின் மாய வித்தையினால் செய்யப்பட்ட பலப் பொருட்களைப் போன்று, இந்த உலகை நாம் நம்மிடத்தில் மாயத்தோற்றமாகத்

தோற்றுவித்து இருக்கின்றோம். இது உண்மை இல்லை என அருளிய பகவான் நீர்தானோ!

**விளக்கம்:**

மாயவித்தை செய்பவனால் தோற்றுவிக்கப்பட்ட அனைத்து பொருள்களுமே, வெறும் தோற்றம் மாத்திரம்தான், அவைகள் உண்மையிலேயே கிடையாது என்று புரிந்து கொள்ளுதலாகிய அறிவு நம்மிடத்தில் இருப்பதுப் போன்று, இந்த உலகம் நம்முடைய மனம் என்ற மாயா சக்தியினால் தோற்றம் மாத்திரமாக படைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இது நிரந்தரமான உண்மையில்லை என்று புரிந்து கொள்வதே ஞானம். அந்த மெய்ஞ்ஞான அறிவே நம்மை இந்த உலகத்திலிருந்து உண்டாகின்ற துன்பங்களிலிருந்து விலகும் வழியை காட்டுகின்றது.

**பாடல் 61**

*பொய்யானது எப்படி தோன்றும்?*

**மித்தையெனும் சகத்து நின்பால் விளங்குமோ எனவினவ
சுத்திதனிலே ரசதம் தோன்றுதல்போல் என்றவரோ.**

**பொருள்:**

பொய்யான இந்த உலகம், உண்மையான என்னிடத்தில் தோன்றுமோ? என்று அர்ஜுனன் கேட்க, சிப்பியில் வெள்ளி தோன்றுவது போல என்று அருளிய பகவான் நீர் தானோ.

**விளக்கம்:**

இல்லாத ஒரு பொருள், இருக்கின்ற ஒன்றின்மீது ஏற்றி வைத்து இருப்பதைத்தான் "**மித்யா**" என்று அழைக்கின்றோம். எவ்வாறு, மணல் வெளியில் இருக்கின்ற சிப்பியின் மேல் சூரிய ஒளிபட்டு, காண்பதற்கு ஒரு வெள்ளிகாசு கீழே கிடப்பது போன்றுத் தோன்றுகின்றது. அதுபோல, ஒரே உண்மைப் பொருளான பிரம்மத்தின் மீது, மாயையினால் இந்த உலகம் இருப்பது போலத் தோன்றுகின்றது.

**பாடல் 62**

*அர்ஜுனன் கேட்கின்றான்:– முன் இருந்ததா இவ்வுலகம்?*

**அயல்வெள்ளி சுத்தியின்மேல் ஆரோபிதம் கூடும்**
**இயல்உள்ள சகமும்முன் வேறு இருந்ததும் உண்டெனவே.**

<u>பொருள்:</u>

வேறாக தனியே இருக்கும் வெள்ளியானது சிப்பியின் மீது ஏற்றி வைக்கப்பட்டு கற்பிதமாகத் தோன்றுகிறது. காரண, காரிய ரூபமாக உள்ள இந்த உலகமும் காண்பதற்கு முன் வேறாகத் தனியே இருந்ததும் உண்டா? என அர்ஜுனன் கேட்கின்றான்.

<u>பாடல் 63</u>

*<u>கண்ணனின் பதில் :– இல்லாததுவும் தோன்றும்!</u>*

**மனமயக்கம் பிடிக்கில் இல்லா வத்துவும் தோன்றிடும் அதுவோ**
**கனவில் விண்ணில் தான்பறக்கக் கண்டதுபோல் என்றவரோ.**

<u>பொருள்:</u>

மனமயக்கம் ஏற்படுகின்ற பொழுது, இல்லாத எந்த பொருளும் கூட இருப்பதாகத்தான் தோன்றும். அது எவ்வாறு என்றால், கனவில் ஆகாயத்தில் தான் பறப்பதாக காண்பது போன்று, என்றருளிய பகவான் நீர் தானோ.

**விளக்கம்:**

அறியாமையினால், கயிற்றின் மீது பாம்மை ஏற்றி வைத்துக் கொண்டு, உண்மையான பாம்பு இருப்பதுப் போன்று, பயந்து நடுங்குகின்றோம் அல்லவா? அதுப்போன்றே, அறியாமையினால், இந்த உலகத்தை ஆன்மாவாகிய சேதனத்தின் (அறிவின்) மீது ஏற்றி வைத்துக் கொண்டு, இருப்பதுப் போன்று காணப்படுகின்றது. அதனால், உண்மை என்று நம்புகின்றோம்.

இந்த உலகம் அவரவர்களின் மனதினால் கற்பிக்கப்படுகின்றது. அத்துடன், நம் மனதில் உண்டாகும் எண்ணங்களைப் பொருத்தே இந்த உலகத்தின் இருப்பும் அமையும். அதாவது, தன் மனம் எப்படியோ, அப்படியே இந்த உலகம் அவர்களுக்கு விரிகின்றது.

உலகத்தின் காண்பது அனைத்துமே ஆனந்தமாக இருப்பின், அந்த மனம் ஆனந்தமாக இருக்கின்றது என்றும், அதுவே, காண்பது அனைத்துமே துன்பம் நிறைந்ததாக இருப்பின், அந்த மனம் துயரத்துடன் இருக்கின்றது என்று அறிந்துக் கொள்ள வேண்டும்.

அதன் அடிப்படையில்தான் இங்கு, கனவு உலகத்திலே, கனவு காண்பவன் தான் விண்ணில் பறப்பதுப் போன்று

தோன்றுகின்றது. அது அவனது மனதின் கற்பிதம். அவ்வாறே, மன மயக்கத்தினால் (மாயையினால்), இல்லாததை இருப்பதுப் போன்று காண்கின்றோம் என்பதாக இங்கு கூறப்படுகின்றது.

## பாடல் 64

*அர்ஜுனன் கேட்கின்றான்:- உலகம் விளங்குவது எதனால்?*

**கனவுபோல் பிரபஞ்சம் என்றீர் கண்விழித்தால் கனவு பொய்யாம்**
**வினவுசகம் தினமும்மெய்யா விளங்குவதுஎன் சொல்லுமென.**

### பொருள்:

கனவு போல உலகத் தோற்றம் பொய்யானது என்று சொன்னீர்கள். விழித்தவுடன் கனவு மறைந்து விடுகிறது. ஆனால், நினைவில் காணப்படுகின்ற இந்த உலகமோ எப்பொழுதும் உண்மையாக விளங்குவது ஏன்? என்று அர்ஜுனன் கேட்கின்றான்.

### விளக்கம்:

கனவு உலகம் என்பது உறக்கத்திலே சில நிமிடங்கள் வந்து போகின்ற உலகமாக இருப்பதினால், கண் விழித்துப் பார்த்தவுடன், அது கற்பனை என்று அறிய முடிகின்றது. அதுவே, இந்த நினைவு உலகம் தினந்தோறும் நித்தியமாக,

சத்தியமாகக் காணப்படுகின்றதே, அப்படி இந்த நினைவு உலகம் உண்மையாக இருக்க என்ன காரணம் என்று எடுத்துக் கூறுங்கள் என்று அர்ஜுனன் கேட்கின்றான்.

## பாடல் 65

*கண்ணனின் பதில் :– மெய்யறிவு வந்தால் மறைந்துவிடும்!*

**மெய்யாக விளங்குவது மெய்ஞானம் வரும் அளவும்
பொய்யாம்பின் கனவுஅதுபோல் போதம்வரில் என்றவரோ.**

**பொருள்:**

உலகம் உண்மையாக விளங்குவது மெய்யறிவு வரும் வரை மட்டும்தான். மெய்ஞானம் வந்தவுடன் கனவு போல உலகமும் பொய்யாய் மறைந்துவிடும் என்று அருளிய பகவான் நீர்தானோ!

**விளக்கம்:**

இந்த உலகம் உண்மையாகத் தோன்றுவது என்பது, இதைப்பற்றிய உண்மை அறிவு உண்டாகாதவரை மட்டும்தான் அவ்வாறு இருக்கும். அதுவே, தத்துவஞான விசாரத்தில் ஈடுபட்டு, இந்த உலகம், உயிர், இறைவன்

என்பதைப் பற்றிய அறிவுத் தெளிவு அடைந்து, அந்த ஆன்ம ஞானம் உண்டாகி விட்டால், இருப்பது ஒன்றேயான அந்த இறைவனுக்கு வேறாக, இந்த உலகம், உயிர்கள் என்று தனியாக ஏதுமில்லை என்ற அறிவு விளங்கும்.

பாடல் 66

*அர்ஜுனன் கேட்கின்றான்:–*

*ஞானிகளுக்கும் உலகம் தெரிவது எதனால்?*

**முன்புகண்ட கனவு பொய்யாம் முழிசாக்ரம் போலஎன்றீர்**
**பின்புமுக்தித் தசை அடைந்தும் பிரபஞ்சம் நிற்பது ஏதுஎனவே.**

பொருள்:

முன்பு உறக்கத்தில் கண்ட கனவு உலகம் போன்று, இந்த விழிப்பு நிலையில் தோன்றுகின்ற உலகமும் பொய் என்று சொன்னீர். ஆனால், முக்தி நிலை (ஆன்ம அறிவு) அடைந்த பிறகும் உலகமானது (கனவைப் போல விழித்தவுடன் மறைந்து விடாமல்) தோன்றுவது எதனால் என்று அர்ஜுனன் கேட்கின்றான்.

<u>பாடல் 67</u>

*கண்ணனின் பதில் :– தோற்றத்தில் இருந்தாலும் பயன்படாது.*

**தெரிந்தவர்க்குத் தோற்றுவது தெத்தபடம் போல்வதல்லால்
பரந்தசகம் காரியத்தில் பயன்படாது என்றவரோ.**

<u>பொருள்:</u>

மெய்ஞ்ஞானத்தை அடைந்த ஞானிகளுக்கு இந்த உலகமானது, அடுக்கி வைக்கப்பட்ட துணிகள் எரிந்துப் போய் சாம்பலான பிறகும், காட்சிக்கு அப்படியே இருப்பது போன்று தோன்றினாலும், அவைகளைப் பயன்படுத்துவதற்கு முடியாது.

அதுப்போன்று, ஆன்ம ஞானத்திற்கு பிறகு இந்த உலகம் தோற்றத்தில் இருந்தாலும், ஞானிகளின் விவகாரத்தில் அது ஒன்றும் சுக, துக்கத்தை அவர்களுக்கு கொடுப்பதில்லை என்று அருளிய பகவான் நீர்தானோ.

<u>விளக்கம்:</u>

மெய்ஞானத்தை அறிந்தவர்களுக்கும் இந்த உலகம் தோன்றுவது என்பது, மடித்து, அடுக்கி வைக்கப்பட்ட துணிகள், தீயினால், எரிந்து சாம்பாலான பின்பும், அதன் மடிப்பு கலையாமல், காட்சிக்கு காண்பதற்கு அப்படியே அடுக்கி

வைத்த அமைப்பிலேயே தோன்றிக் கொண்டு இருக்கும். ஆனால், அவைகள் உடுத்துவதற்குப் பயன்பாடாது.

அதுப்போன்று, மெய்ஞ்ஞானத்தை அடைந்தவர் களுக்கும் இந்த உலகமானது காட்சிக்கு அப்படியே காணப்படும், ஆனால், உலக விவகாரத்திற்கும், இதனால் உண்டாகின்ற சுக, துக்கங்கள் என்பதுவும் உண்மையல்ல என்பதை அந்த மெய்ஞானிகள் நன்கு அறிந்திருப்பார்கள்.

பாடல் 68

*அர்ஜுனன் கேட்கின்றான்:–*

*அஞ்ஞான காரியம் உடனே போகாதது ஏன் ?*

**கர்மவினை அஞ்ஞானம் கடந்தும் அதன் காரியமாம்**
**புன்மைஉறு மெய் உடனே போகாதது ஏதெனவே.**

பொருள்:

பிறவிக்குக் காரணமான கர்ம வினைகளும், அறியாமைகளும் அடைந்த மெய்ஞ்ஞானத்தினால், அழிந்து விட்டாலும், அதன் காரியமாக வெளி வந்த, இந்த பரு உடலானது, அவைகளோடு சேர்ந்து அழியாமல், இன்னும்

அப்படியே இருப்பதற்குக் காரணம் யாது? என்று அர்ஜுனன் கேட்கின்றான்.

__விளக்கம்:__

பிறப்பி, இறப்பு என்ற சம்சாரத்திற்குக் காரணமான பிறவித்தளைகளான **சஞ்சிதம், ஆகாமியம், பிராரப்தம்** என்ற மூன்று கர்ம வினைகளும், தன்னைப் பற்றிய உண்மையான சொரூப ஞானம் உண்டாகாத அறியாமையினாலும், இந்த உடல் மீண்டும், மீண்டும் பிறப்பு எடுக்கின்றது.

அத்தகைய இந்த மனித உடல் பிறப்பின் வாயிலாக இந்தப் பிறவியிலேயே ஒருவனுக்கு மெய்ஞ்ஞானம் அடைந்த பிறகு, அந்த உடல் உண்டாவதற்குக் காரணமான கர்ம வினைகளும், அறியாமைகளும் அழிந்து விட்டாலும், அவனது இந்த பரு உடல் மட்டும் அழியாமல் இன்னும் இருக்கக் காரணம் என்ன என்று அர்ஜுனன் கேட்கின்றான்.

__பாடல் 69__

*__கண்ணனின் பதில் :– சிறிது காலம் இருக்கும்!__*

**வெட்டவிழும் மரம்பசந்து விளங்குதல்போல் சிலகாலம்**
**நட்டகன்மம் மாய்ந்தும் அங்கம் நடித்திடுங்காண் என்றவரோ.**

<u>பொருள்:</u>

வெட்டிய உடன் கீழே விழுந்த மரமானது சிறிது காலத்திற்கு பசுமையாகவே தோன்றுவது போல, தான் முன்பு செய்த கர்ம வினைகள் அழிந்து போனாலும், அதன் காரியமாகிய உடல் சிறிது காலம் இயங்கிக் கொண்டிருக்கும் என்று நீ அறிவாயாக என்று அருளிய பகவான் நீர் தானோ!

<u>விளக்கம்:</u>

வினைகளுக்குக் காரணமான அறியாமை (அஞ்ஞானம்), ஞானத்தினால் அழிந்து போன பிறகும், தற்போது உள்ள இந்த பரு உடல் உண்டாவதற்கு காரணமான மூன்று கர்ம வினைகளில் சஞ்சிதமும், ஆகாமியமும் உடனே அழிந்து போகும். ஆனால், அத்துடன் சேர்ந்து மற்றொரு வினையான பிராரப்த வினை மட்டும் அழியாமல், அனுபவித்துத்தான் தீர்க்க வேண்டியது இருக்கும். காரணம், சுக, துக்கங்களை அனுபவிக்க கொண்டு வந்த, அந்த பிராரப்த வினை தீரும் மட்டும் இந்த உடல் சில காலம் இருக்கும்.

<u>**பாடல் 70**</u>

*அர்ஜுனன் கேட்கின்றான்:- ஆத்மா பலவா?*

**சென்மம்போய் முக்தியினை சேரச்சிலர் இருக்கத்,**
**தொன்மை ஆன்மா பலவோ சொரூபம் பகரும் என.**

<u>**பொருள்:**</u>

முக்தி அடைந்ததினால், சிலர் பிறவிகளைக் கடந்து பிறக்காமல் இருக்க, இன்னும் சிலர் மட்டும் பிறவிகளுடன் இங்கிருப்பதினால், இந்த அனாதியான ஆன்மா அநேகமாக இருக்கின்றதா? இதன் உண்மையைச் சொல்லுங்கள் என்று அர்ஜுனன் கேட்கின்றான்.

<u>**பாடல் 71**</u>

*கண்ணனின் பதில் :- ஆன்மா ஒருவனே!*

**பிரம்மம் என்றும் ஈசன் என்றும் பெருகுபல சீவர் என்றும்**
**உரைமயக்கம் அலதுஆன்மா ஒருவனே என்றவரோ.**

**பொருள்:**

நிர்குண பிரம்மம் என்றும், சகுண ஈஸ்வரன் என்றும் பல சீவர்கள் என்றும் கூறப்படுவது, தவறாக ஏற்றி வைக்கப்பட்ட அறிவேயன்றி உண்மையல்ல. ஆனால், ஆன்மா ஒன்று மட்டும்தான் உண்மை என்று அருளிய பகவான் நீர் தானோ.

**விளக்கம்:**

ஒன்றேயான இரண்டற்ற நிர்குண பிரம்மமே (உருவமற்ற பிரம்மமே), சகுண ஈஸ்வரனாக (உருவமுள்ள விஷ்ணு, சிவன் எனப் பலவாறாக) கூறப்படுவதுவும், பல சீவர்களாக கூறப்படுவதும் எல்லாமே, அறியாமையினால் உண்டான மன மயக்கம் ஆகும். இருப்பது ஒன்றேயான ஆன்மா என்பதே உண்மை.

**பாடல் 72**

*அர்ஜுனன் கேட்கின்றான்:– பலவாய் தோன்றுவது எதனால்?*

**ஏகம்தான் ஆன்மா எனும்வகையே மெய் ஆனால்**
**ஆகந்தோறும் பலவாய் அமர்ந்தது என்னோ சொல்லுமென.**

<u>பொருள்:</u>

ஒன்றாக மட்டுமே ஆன்மா இருப்பது உண்மையென்றால், பிறகு ஏன் அதுப் பலவாறாக ஒவ்வொரு உடலிலும், தனித்தனியாக "**நான்**" என்று அறியப்படுவதற்குக் காரணம் என்ன? அதைப் பற்றிய விளக்கத்தை எனக்கு கூறி அருளுங்கள் என்று அர்ஜுனன் கேட்கின்றான்.

<u>பாடல் 73</u>

*<u>கண்ணனின் பதில் :– தோன்றுவது பிரதிபிம்பம்</u>*

**பலகடத்தில் சலத்துஊடு பானுபிம்பம் தோன்றுதல்போல்**
**தொலைவில்புத்தி தொறும்ஆன்மா தோன்றுதல் காண் என்றவரோ!**

<u>பொருள்:</u>

ஒரே சூரியனின் பிரதிபிம்பமானது பல குடங்களில் உள்ள நீரில், பல சூரியன்களாகத் தோன்றுவதுப் போல, மெய் ஞானத்தை அடையும்வரை, அழிவில்லாமல் இருக்கக்கூடிய அந்தக்கரணமான மனம், புத்தி போன்றவைகளில் ஆன்மாவின் பிரதிபிம்பம் தோன்றுவதை அறிவாயாக! என்று அருளிய பகவான் நீர்தானோ!

**விளக்கம்:**

சூரியன் ஒன்றுதான். அதன் பிரதிபிம்பம் பல்வேறு குடங்களில் வைக்கப்பட்டுள்ள நீரில், பல சூரியன்களாகத் தோன்றுவதுப் போன்று, (அல்லது) குளம், குட்டை, ஆறு போன்ற ஒவ்வொரு நீர் நிலைகளிலும், தனித்தனியாக ஒவ்வொரு சூரியன் என காணப்படுவதைப் போன்று, ஒன்றேயான ஆன்மா, இந்த உபாதிகளான உடல்களில் உள்ள அந்தக்கரணங்களின் வாயிலாக, (அதாவது பல மனங்களில்) அதனுடைய பிரதிபிம்பம் பலவாகத் தோன்றுகின்றது.

பாடல் 74

*அர்ஜுனன் கேட்கின்றான்:– முக்தி யாருக்கு?*

**ஆதித்தன் போல் ஆன்மா அளவில் புத்திதொறும் தோன்றில்**
**சாதிக்கும் முத்திஎவர் தமக்கு அதனைச் சாற்றும் என.**

**பொருள்:**

ஒரே சூரியன் பல குடத்து நீரில், பலவாகத் தோன்றுதல் போன்று, ஒரே ஆன்மா பல்வேறு உடல்களில் உள்ள ஒவ்வொரு மனம்தோறும் எண்ணற்ற பிரதிபிம்பமாகத்

தோன்றுகின்றது என்றால், இங்கு முக்தியை அடைவது யார்? அதனைச் சொல்லும் என அர்ஜுனன் கேட்கின்றான்.

**விளக்கம்:**

ஒரே ஒரு சூரியன் பலவாறான நீர் நிலைகளின் காரணமாகப் பல சூரியன்களாகத் தோன்றுகின்றது என்பதுப் போன்ற, ஒரே ஒரு ஆன்மா, பல்வேறு உபாதிகளான உடல்களின் வாயிலாக பல ஆன்மாக்களாகத் தோன்றுகின்றது என்று கூறுவதாக இருந்தால், இதில் முக்தி என்பதை அடைவது ஆன்மாவா அல்லது மனமா? இதைச் சற்று எனக்கு எடுத்துக் கூறுங்கள் என்று அர்ஜுனன் கேட்கின்றான்.

பாடல் 75

*கண்ணனின் பதில் :– பந்தமும் முக்தியும் மனதிற்கே!*

**பந்தம்முக்தி தானும் அந்தப் பரந்தபுத்தி தனக்கேயாம்**
**அந்தபிம்பம் தனக்கிலையென்று அறிவுவரச் சொன்னவரோ.**

பொருள்:

பந்தமும், முக்தியும் (விஷயங்களை நோக்கிய) **"நான்"** என்ற அபிமானத்துடன் உள்ள அந்தக்கரணமான மனதிற்குத்

தான் உண்டாகின்றது. ஆனால், அந்த பிரதி பிம்பங்களுக்கு மூலமான ஆன்மாவாகிய தனக்கு (பந்தமும் முக்தியும்) இல்லை, என்று அர்ஜுனனுக்கு அறிவு ஏற்படும்படி உபதேசித்த பகவான் நீர்தானோ.

<u>**விளக்கம்:**</u>

உடலும், மனமும் உண்மையில் ஜடமானவை. மனதில் சைதன்யமான (அறிவு வடிவான) ஆன்மாவின் பிரதிபிம்பம் ஏற்பட, அந்த அறிவற்ற மனது சேதனத்தன்மையை அடைகின்றது.

அதாவது, சூரிய ஒளி பட்ட கண்ணாடி, அந்த ஒளியின் பிரதி பிம்பத்தால் பிரகாசத்தை அடைவதுப் போன்று இந்த மனம் ஆன்மாவின் பிரதி பிம்பத்தால் அறிவை அடைகின்றது.

அவ்வாறு அறிவு பெற்ற மனமானது, இந்த '**பரு உடலை நான்**' என்று அபிமானித்து, அதன் காரணமாக, "**நான்**", "**எனது**" என்ற பந்தத்தில் சிக்கிக்கொண்டு, தன்னை அற்ப சீவனாக பாவித்து உழல்கின்றது.

அதுவே, ஆன்ம ஞானத்தினால், தெளிவை அடைந்த அதே மனமானது தன்னை அழிவற்ற "**ஆன்மா**" என்று

அறிகின்ற பொழுது, இந்த உடல் இருக்கின்ற பொழுதே **சீவன் முக்தியை** அடைகின்றது.

மனதின் இந்த இரண்டு விதமான அபிமானத்திற்கும், உண்மையில் ஆன்மா வெறும் சாக்ஷி மாத்திரமாகவே இருக்கின்றது. ஆகவே, ஆன்மா உண்மையில் பந்தத்தையும் அடைவதில்லை, முக்தியையும் அடைவதில்லை என்பதை அறிகின்ற மெய்யறிவே, "**மெய்ஞ்ஞானம்**" எனப்படுகின்றது.

## பாடல் 76

*பல சீவர்கள் எதனால்?*

**பரம் ஏகம் ஆயும் அதில் பலசீவர் ஏதுஎனவே**
**ஒரு கடலில் பலகுமிழி உதிப்பதுபோல் என்றவரோ.**

**பொருள்:**

பரமாத்மா ஒன்றாக மட்டுமே இருக்கின்ற பொழுது, அதனிடத்தில் பல சீவர்கள் தோன்றுவது எப்படி? என்ற சந்தேகத்தை அர்ஜுனன் பகவான் கண்ணனிடம் கேட்கின்றான்.

அதற்கு, பகவான் ஸ்ரீ கண்ணன் பின்வருமாறு பதில் அளிக்கின்றார். ஒரு கடலில் பல நீர்க்குமிழிகள் (காற்றினால்) உண்டாவதுப் போன்று, (மாயையினால் இவ்வாறு பல சீவர்கள் உண்டாகின்றனர்) என்றருளிய பகவான் நீர்தானோ.

பாடல் 77

*அர்ஜுனன் கேட்கின்றான்:– பேரின்பம் எப்படித் தோன்றும்?*

**சீவன் அது தான்என்றும் சேரும் பிரம்மம்என்றும்**
**ஆவதுவோ பேரின்பம் ஆங்கது எனக்கு ஓதுமென.**

பொருள்:

நான்தான் சீவன் என்றும், பிரம்மம் அடையத்தக்கது என்றும் இருந்து, பின்னர் அடைந்த ஆன்ம ஞானத்தினாலே, சீவன் பிரம்மமாக ஆவதுதான் பேரின்பம் என்று சிலர் கூறுவதுப் பற்றி எனக்கு சற்று விளக்கமாக அருளுங்கள் என அர்ஜுனன் கேட்கின்றான்.

பாடல் 78

*கண்ணனின் பதில் :– இரண்டற்ற ஒன்றே!*

**ஏகம்பிரம்மம் இரண்டுஇலை நீ வேறும்அல**
**சோகமுறும் பேதம்அறில் தோன்றும் இன்பம் என்றவரோ.**

<u>**பொருள்:**</u>

பிரம்மமும் ஆன்மாவும் ஒன்றுதான், இரண்டு இல்லை, அதனால், நீ பிரம்மத்திற்கு வேறானவன் இல்லை. அறியாமையினால், துன்பத்தைக் கொடுக்கும் நான் வேறு, ஆன்மா வேறு என்ற தவறான அறிவை விட்டுவிட்டால், தானாகவே பேரின்பமானது தோன்றும் என்று அருளிய பகவான் நீர்தானோ!

<u>**விளக்கம்:**</u>

பிரம்பம் ஒன்று மட்டும்தான் உண்மைப்பொருள். அதன் பிரதிபிம்பம் வெறும் தோற்றமாத்திரம் ஆகும். அப்படிப்பட்ட இரண்டற்ற பிரம்மத்தை பரமான்மா, சீவான்மா என்று இருமைகளில் உண்டாக்கிக் கொண்டு, இன்ப, துன்பங்களை அடைவது என்பது, அறியாமையினால் மட்டுமே நிகழ்கின்றது.

அதாவது, ஆன்மாவின் பிரதிபிம்பத்தினால் உண்டான உடலிலும், மனதிலும் தோன்றியிருக்கும் தற்காலிகமான உயிர்த் தன்மையை, இந்த உடலோடு இணைத்துக் கொண்டு, இந்த உடலும், மனமுமே **"நான்"** என்று கருதுவது அறியாமை எனப்படுகின்றது.

இந்த உடலும், மனமும் தானே இயங்கக் கூடியவைகள் அல்ல. காரணம் அவைகள் அறிவற்ற ஜடம் மாத்திரமே ஆகும். அத்தகைய இந்த ஜடமான உடலும், மனமும் ஆன்மாவின் அறிவு சம்பந்தத்தினாலேயே இயக்கத்தைப் பெற்றிருக்கின்றன.

அந்த வகையிலே, இதுவரை இந்த உடலிலிருந்த "**நான்**" என்ற அகங்காரம் வெறும் பிரதிபிம்பம் மாத்திரமே. ஆகவே, பிரதிபிம்பம் ஆகிய அகங்கார "**நான்**" உண்மையில் நானல்ல. எனவே, பிரதிபிம்பத்துக்கு காரணமான ஆன்மாவே உண்மையில் "**நான்**" எனப்படுகின்றது.

அந்த ஆன்மாவே '**பிரம்மம்**' என்றும், அந்த பிரம்மமே "**நான்**" என்றும் அறிகின்ற மெய்ஞானம் வருகின்ற பொழுது, உடனடியாக என்றும் நிலையான பேரின்பம் உண்டாகின்றது.

ஆகவே, பிரதிபிம்பம் (சீவன்) பிம்பத்தை (பிரம்மத்தை) அடைகின்றது என்பது உண்மையல்ல. எனவே, என்றும் நித்யமான, சத்தியமான அந்த ஒரே ஆன்மாவாகவே "**நான்**" இருக்கின்றேன் என்ற அத்வைத நிலையே, நிலையான பேரின்பத்தை தருகின்றது.

**பாடல் 79**

*சித் மாத்திரமாக இருக்க முடியுமா?*

**சீவபேதம்போமோ சித்துஒன்று ஆமோஎனவே**
**ஆவல்மனம் அறும்சுழூத்தி அவத்தையில்பார் என்றவரோ.**

**பொருள்:**

சீவன் வேறு, பிரம்மம் வேறு, என்ற இந்த இருமைகளால் ஆன, மன பேதமானது நீங்கி, ஒன்றேயான அந்த அறிவு சொரூபமாக மட்டுமே, என்னால் நிலைத்து நிற்க முடியுமா? என்று அர்ஜுனன் கேள்வி கேட்கின்றான். அதற்கு, பகவான் கண்ணன் பின்வருமாறு பதில் உரைக்கின்றார்.

விழிப்பு நிலையில் விஷய, சுகங்களில் ஆவல் கொண்டு அலைகின்ற இந்த மனமானது, ஆழ்ந்த உறக்கத்தில் அடங்கி, அந்த அறிவு மாத்திரமாகவே (தன் சொரூபத்தில்) நிலைத்து நிற்பதை, தினந்தோறும் நீ ஆழ்ந்த உறக்கத்தில் அடைகின்றாயே என்று எடுத்துக் கூறுகின்றார்.

**விளக்கம்:**

அலைப்பாய்கின்ற மனதை ஆன்ம தத்துவத்தில் லயமாக்கினால், ஆழ்ந்த உறக்கத்தில் உண்டாகின்ற மனமற்ற

நிலையில் கிடைக்கின்ற, அந்த ஆனந்தம் போன்று, விழிப்பு நிலையிலும் சிதான்மா மாத்திரமாக இருக்க முடியும் என்பது இங்கு கூறப்படுகின்ற உன்னத கருத்து. அதாவது, தூங்காமல் தூங்கி சுகம் பெறுவது! என்று இதையே கூறப்படுகின்றது.

பாடல் 80

*அர்ஜுனன் கேட்கின்றான்:–*

*பூதமயத்தோற்றம் போகாதது ஏன்?*

**பேதம் அல இவ்வுலகம் பிரமமயம் என்றறிந்தும்**
**பூதமய மாய்த்தோற்றல் போகாதது ஏதுஎனவே.**

பொருள்:

இந்த உலகம் பிரம்மத்திற்கு வேறானதல்ல, பிரம்ம ஸ்வரூபமே என்றறிந்த பின்னரும், பஞ்சபூத வடிவமாகத் தோன்றுதல், மறைந்து போகாது எதனால்? என அர்ஜுனன் கேட்கின்றான்.

**பாடல் 81**

*கண்ணனின் பதில் :– கானல்நீர் போல் தெரிகிறது!*

**கானலை நீர் என்று ஓடிக் கண்டவர்க்குத் தீர்ந்தபின்னும்
வானுலவு நீராகி வயங்குதல்போல் என்றவரோ.**

**பொருள்:**

கானல் தோற்றத்தை நீரென்று கருதி அருகில் சென்று பார்த்தவருக்கு, அது நீரில்லை என்று தெரிந்த பின்னரும், அவரது காட்சியில் வானிலிருந்து பொழிந்த மழைநீராகவே அந்த கானல் நீர் தோன்றுவது போல, என்றருளிய பகவான் நீர்தானோ.

**விளக்கம்:**

பாலை நிலத்தில் சூரிய வெப்பத்தால் தோன்றுகின்ற கானல்நீர் உண்மையில்லை என்றறிந்த பின்னரும், அங்கு நீர் இருப்பது போல தோற்றம் தெரியத்தான் செய்கின்றது.

அதாவது, நம்முடைய அறிவில் நீர் என்பது இல்லை என்று உறுதியானவுடனும், நம் கண்களின் காட்சியாக தோற்றத்தில் அந்த நீர் இருக்கத்தான் செய்கின்றது.

அதைப்போல, அடைந்த மெய்ஞ்ஞானத்தினால் உலகமும் உண்மையில்லை என்றறிந்த பின்னரும், நம் தோற்றத்தில் இந்த உலகம் இருக்கத்தான் செய்கின்றது.

அதாவது, இந்த உலகம் அனைத்தும் பிரம்மமயமே என்று அறிவில் அறிந்தும், தோற்றத்தில் பஞ்ச பூதங்களாய் தோன்றிக் கொண்டு, போகாமல் இருக்கின்றது.

அவ்வாறே, சூரியன் தோன்றுவதும் இல்லை, மறைவதும் இல்லை என்பது அறிந்த அறிவு, ஆனால், அனுபவத்தில் தோற்றமும் மறைவும் தெரிகிறது. இதனால், இந்த அனுபவம் உண்மையாகி விடாது.

<u>பாடல் 82</u>

*<u>அர்ஜுனன் கேட்கின்றான்:–</u>*

*<u>மூன்றாயிருத்தல் வேறுபாடில்லையா?</u>*

**அறிவானும் நல்லறிவும் அறியப்படும் பொருளும்**
**பிறிவாய் மூன்றாயிருத்தல் பேதமலவோ எனவே.**

**<u>பொருள்:</u>**

அறிபவன், அறிவு, அறியப்படும் பொருள் என பிரிந்து மூன்றாக இருத்தல் வேறுபாடு இல்லையா? என அர்ஜுனன் கேட்கின்றான்.

**<u>விளக்கம்:</u>**

*அறிபவன், அறிவு, அறியப்படும் பொருள்*, என்ற இந்த மூன்றிற்கும் '**திரிபுடி**' என்று பெயர்.

அதாவது மூவகை வேறுபாடுகள் உள்ளன. ஆனால், ஆன்மாவுக்கு வேறாக ஒன்றுமில்லை என்றால், இந்த வேறு பாடுகள் நம் அனுபவத்தில் இருக்கின்றனவே, என்பது அர்ஜுனனின் கேள்வி.

**<u>பாடல் 83</u>**

*<u>கண்ணனின் பதில் :– தோன்றினாலும் உண்மையில்லை!</u>*

**சொப்பனத்தில் தனித்தொருவன் தோற்றம்வேறு இல்லையங்கே**
**கற்பனையாம் பொருளறிவு காண்பவன்போல் என்றவரோ.**

**பொருள்:**

தனியே ஒருவன் உறங்கும் பொழுது, அவனது கனவில் காணப்படும்பொருள், காண்பவன், காட்சி என்ற மூன்றும் வேறு வேறாகத் தோன்றுவது போலக் கண்டாலும், அவைகள் கனவு காண்கின்றவனின் மனதிற்கு வேறாக இல்லை அல்லவா?

அவ்வாறே, நனவிலும் இம்மூன்றும் வேறுவேறாகத் தோன்றினாலும், உண்மையில் ஆன்மாவிற்கு வேறாக இல்லை என்றருளிய பகவான் நீர்தானோ.

**பாடல் 84**

*அர்ஜுனன் கேட்கின்றான்:– பேதங்களை மறப்பது எப்படி?*

**கற்பனையாம் பேதங்கள் காணாமல் போம்வகையை**
**விற்பனமாய் நானறிய விளம்பு எனவே வணங்க.**

**பொருள்:**

கற்பனையான இந்த வேறுபாடுகள் தெரியாமல், இவைகள் மறைந்து போகும் முறையை, நான் நன்றாக

அறிந்துக் கொள்ளும்படி, எனக்கு எடுத்துக் கூற வேண்டும் என்று அர்ஜுனன் வணங்கிக் கேட்கின்றான்.

<u>பாடல் 85</u>

*கண்ணனின் பதில் :– யோகத்தால் பேதம் நீங்கும்*

**துரியமாம் யோகத்தால் தூயமனம் லயமானால்**
**அரிய மூவகை விகற்பம் அழியுமென்று சொன்னவரோ.**

<u>பொருள்:</u>

தன்மயமாக இருக்கின்ற நிதி யாஸனமாகிய தியான யோகப் பயிற்சியினால், தூயமனம் (விருப்பு, வெறுப்புகளற்ற) ஆன்ம தத்துவத்தில் ஒடுங்கி நின்று இலயமானால், இம்மூவகை வேறுபாடுகளும் அழிந்து போகும் என்றருளிய பகவான் நீர்தானோ!

<u>விளக்கம்:</u>

சிரவணம் (கேட்டல்), மனனம் (கேட்டவைகளை சிந்தித்தல்), நிதித்யாஸனம் (அறிவு தெளிந்து, கற்றவற்றில் நிலைத்து நிற்றல்) என்ற இந்த மூன்று விதமான நித்ய யோகப் பயிற்சியினால், இந்த மனம் ஐயமின்றி அறிந்த, ஆன்ம

தத்துவத்தைக் கொண்டு, விருப்பு, வெறுப்புகள் போன்ற இருமைகள் இன்றி, தூயமனமாக மாறி, அறிந்துக் கொண்ட அந்த ஆன்மாவுடன் அனுபவத்தில் இலயமாகினால், இந்த **அறிபவன், அறிவு, அறியப்படும்பொருள்** என்ற மூன்றும் வேறுபாடுகள் இல்லாமல், ஒன்றாக மாறிவிடும்.

## பாடல் 86

*அர்ஜுனன் கேட்கின்றான்:– ஆன்மா தெரியாததேன்?*

**சிறந்து இருக்கும் ஆன்மாவும் செகமெல்லாம் நிறைந்திருந்தும்**
**மறைந்து எனக்குத் தோன்றாத வகையேது சொல்லுமென.**

### பொருள்:

சச்சிதானந்த வடிவமாய் சிறப்புடன் விளங்கும் ஆன்மா, இந்த உலகமெங்கும் பரவியிருந்தாலும், எனது மனதிற்கு இதுநாள் வரையிலும் விளங்காமல் இருக்கக் காரணம் என்ன? என்று அர்ஜுனன் கேட்கின்றான்.

## பாடல் 87

*கண்ணனின் பதில் :– உலகம் மறைத்திருக்கிறது.*

**சத்துச்சித் தானந்தம் தாம்மூன்றும் அதனுடனே
ஒத்துற்று நாம உருவம் சகமாகி.**

**பொருள்:**

சச்சிதானந்தம் என்ற மூன்றும் சேர்ந்ததே, ஒன்றேயான ஆன்மாவின் சொரூப இலக்ஷணமாகும். இந்த மூன்றுடனே பெயரும் வடிவமும் சேர்ந்து இந்த உலகமாக மாறி இருக்கின்றது.

**விளக்கம்:**

சச்சிதானந்தம் என்ற பிரம்மத்தில், '**சத்**' என்பது இருப்பாகவும், '**சித்**' என்பது அறிவாகவும் கூடிய அறிவின் இருப்பாக உள்ள ஆனந்த வடிவமே இந்த பிரம்மம் என்று, பிரம்மத்தின் இலக்ஷணம் கூறப்படுகின்றது.

அறிவின் இருத்தலாகிய ஆனந்த ஸ்வரூபமாகிய ஆன்மாவினிடத்திலே, மாயையின் காரணமாக, நாம, ரூபங்கள் ஏற்றி வைக்கப்பட்டு, அவைகள் இரண்டும் ஒன்றாய் கூடி, இந்த உலகம் உண்டாக்கப்பட்டுள்ளது.

<u>பாடல் 88</u>

*கண்ணனின் பதில் தொடர்கின்றது :–*

*நாம ரூபம் மறையத் தெரியும்!*

**இருக்கையினில் தோன்றாது இவைமூன்றும் பிரமம் என**
**மரிக்கில்வரும் பின்இரண்டு மறிசகம் என்று உரைத்தவரோ.**

<u>பொருள்:</u>

நாம, ரூபங்களோடு இருக்கையில், '**சச்சிதானந்தம்**' (சத், சித், ஆனந்தம்) என்ற மூன்றும் பிரம்மம் என்று தெரியாது. அழிகின்ற உலகமானது நாமம், ரூபம் மட்டுமே என்று, தக்க சத்குரு மூலமாக அறிந்துக் கொண்டு, அவர் கூறிய மெய்ஞ்ஞான உபதேசங்களான வேதாந்த நூல்களைப் பற்றி அனுதினமும் சிந்தித்து, இந்த நாம, ரூபங்களை நீக்குகின்ற பொழுது, பிரம்மம் மட்டுமே தெரியும் என்றருளிய பகவான் நீர்தானோ!

<u>பாடல் 89</u>

*அர்ஜுனன் கேட்கின்றான்:–*

*ஆன்மா அறியப்படும் பொருள் ஆகுமா?*

**அறிந்துகொள் ஞானத்தாலே ஆன்மாவை என்று உரைத்தீர்
சிறந்து ஒளிரும் ஆன்மாவும் திருசியமாமோ எனவே.**

<u>பொருள்:</u>

ஞானத்தினாலே ஆன்மாவை அறிந்துக்கொள் என்று கூறினீர்கள். அவ்வாறு, எங்கும் வியாபித்து அறிவாய் ஒளிரும் ஆன்மாவும், அறியப்படும் பொருள் ஆகுமா? என்று அர்ஜுனன் கேட்கின்றான்.

<u>விளக்கம்:</u>

அதாவது, சாஸ்திரங்களைக் கற்று அறிந்துக் கொண்ட மெய்ஞ்ஞானத்தின் வாயிலாக வாக்குக்கும், மனதிற்கும் எட்டாத ஆன்மாவை எளிதாக இதுபோன்ற ஏற்றி வைக்கப்பட்ட புற அறிவுகளால், அறிபடும் பொருள் போன்று, அறிந்துக் கொள்ள முடியுமா? என்பது அர்ஜுனனின் சந்தேகம்.

<u>பாடல் 90</u>

*கண்ணனின் பதில் :–*

*அஞ்ஞானம் விலக ஆன்மா தானே விளங்கும்!*

**முந்திய ஞானத்தாலே முதிரும் அஞ்ஞானம் துறக்கில்
சிந்தையில் ஆன்மாச்சுயமாய்த் திகழுமென்று சொன்னவரோ.**

<u>பொருள்:</u>

அறிந்துக்கொண்ட மெய்ஞ்ஞானத்தினாலே அனாதி (எப்பொழுது உண்டானது என்று அறிய முடியாத) காலமாக உள்ள அறியாமையை (அஞ்ஞானத்தை) நீக்கினால், தன்னில் தானாய் ஒளிரும் ஆன்மாவானது மனதில் பிரகாசிக்கும் என்றருளிய பகவான் நீர் தானோ!

<u>விளக்கம்:</u>

உண்மையில் ஒன்றேயான பிரம்மம் மட்டுமே இருக்கின்ற பொழுது, அதை அறிந்துக் கொள்வதற்கு, அதற்கு வேறாக ஒன்றுமே கிடையாது. *அறிபவன், அறிவு, அறியப்படும் பொருள்* என்ற '**திரிபுடி**' எல்லாம் கிடையாது.

பல்வேறு பிறவிகளாக செய்த புண்ணியத்தின் காரணமாக கிடைத்த சாஸ்திரமும், சத்குருவும் கொடுத்த மெய்ஞானத்தினாலே, பல்வேறு பிறவிகளாக ஏற்றி வைக்கப்பட்ட அறியாமைகள் (அஞ்ஞானங்கள்), அனைத்தும் முற்றிலுமாக நீங்கி, *அறியப்படும் பொருளாக* இருக்கின்ற, இவைகள் அனைத்திற்கும் ஆதாரமான, ஒன்றேயான பிரம்மத்தை, அறியக்கூடிய *அறிவாக* **"நான்"** மட்டுமே, *அறிபவனாக* இருக்கின்றேன். அப்படிப்பட்ட நானே, அந்த **"பிரம்மம்"** ஆகவும் இருக்கின்றேன் என்ற உண்மையை அறிந்து, தன்னில் தானாய், தன் சொரூபத்தில் எப்பொழுதும் இருப்பதே, இங்கு **"இருப்பு"** எனப்படுகின்றது.

<u>பாடல் 91</u>

*முக்தி சுகம் எப்படி இருக்கும்?*

**இனியமுத்திச் சுகம் இருப்பது எப்படி என்றே வினவ**
**அனுபவத்தில் அறிவிடயானந்தம் போல் என்றவரோ.**

<u>பொருள்:</u>

இனிமையான இந்த முக்தி சுகம் எப்படி இருக்கும்? என்று அர்ஜுனன் கேட்கின்றான். அதற்கு, பகவான் ஸ்ரீ கண்ணன் பின்வருமாறு பதில் உரைக்கின்றார்.

அது, அனுபவத்தில் அறிந்துகொள்ளக்கூடிய, தன் சொரூபமாகிய '**அறிவு**' விசயமாக இருக்கின்றது என்றருளிய பகவான் நீர்தானோ.

**விளக்கம்:**

என்றும் நிலையான இன்பத்தைக் கொடுக்கின்ற முக்தி சுகம் எவ்வாறு இருக்கும் என்று அர்ஜுனன் கேட்க, அதற்கு பகவான் ஸ்ரீ கண்ணன் அது அனுபவத்தில் அறிய வேண்டிய தன் சொரூபமாகிய அறிவின் இருப்பாகிய ஆனந்தம் போன்றது என்கின்றார்.

அதாவது, '**சத்**' (இருப்பு), '**சித்**' (அறிவு) என்ற இந்த **அறிவின் இருப்பு** எங்கு ஒன்றாகின்றதோ, அங்கு **ஆனந்தம்** மட்டுமே இருக்க முடியும். அதுவே, '**சச்சிதானந்தம்**' எனப்படுகின்றது.

அப்படிப்பட்ட அறிவின் இருப்பால் உண்டாகின்ற ஆனந்தமாக "**நான்**" மட்டுமே இருக்கின்றேன் என்று அறிந்துக் கொள்வதே "**மெய்ஞ்ஞானம்**" என்கின்றார்.

அதாவது, ஒரு இனிப்பு பலகாரமான லட்டைப் பற்றி, அது சிறு, சிறு பூந்தி உருண்டைகளால் ஆனது, பந்து போன்று

இருக்கின்றது, அது மிகவும் சுவையானது என்று ஆயிரம், ஆயிரம் விளக்கங்கள் கூறினாலும், அந்த இனிப்பான லட்டை சுவைத்துப் பார்க்காமல், அதன் உண்மைத் தன்மையை எவ்வாறு அறிய முடியாதோ?, அவ்வாறே, இந்த முக்தி சுகம் என்பதையும், தன் சொரூபமாகிய ஆன்மாவின் அனுபவத்தில் மட்டுமே அறிய முடியுமே தவிர, மற்றவர்கள் எடுத்துக் கூறுவதினால் விளங்கிக் கொண்டு விட முடியாது என்று கூறப்படுகின்றது.

<u>பாடல் 92</u>

*மனோலயம்தான் முக்தியா?*

**மனலயம் வந்தவர் அலது மற்று இலரோ முக்தர் என**
**சனகனைபோல் சீவன்முக்தர் தாமும் உளர் எனறவரோ.**

<u>பொருள்:</u>

மனம் ஒடுங்கியவர்களைத் தவிர, வேறு யாரும் சீவன் முக்தர்களாக இல்லையா? என அர்ஜுனன் கேட்கின்றான். அதற்கு ஸ்ரீ கண்ணபிரான் பின்வருமாறு விடையளிக்கின்றார்.

ஜனக மஹாராஜனைப் போன்று, (உலக விவகாரம் செய்கின்ற) சீவன் முக்தர்களும் உலகில் உள்ளனர் என்ற அருளிய பகவான் நீர்தானோ.

**<u>விளக்கம்:</u>**

மனதை ஒடுக்குதல் என்பது, மனதில் எழுகின்ற எண்ணங்களை ஆராய்ந்து, அதன் வாயிலாக வெளிப்படுகின்ற மனோ விருத்திகளை கண்டறிந்து, அவைகளை நடைமுறைப் படுத்தாமல் நிராகரித்து, இது மனதின் கற்பிதம் (ஆரோபிதம்) என்றும், மாயையின் வெளிப்பாடு என்றும் நன்கு அறிந்துக் கொண்டு, அதனால், சற்றும் மனம் கலங்காத நிலையில், தன் உண்மை சொரூப நிஷ்டையில் (பிரம்மத்தில்) நிலைத்து இருப்பவர்களை '**சீவன் முக்தர்கள்**' என்கின்றோம்.

அத்தகைய சீவன் முக்தர்களைத் தவிர, மற்ற யாரும் சீவன் முக்தர்களாக இந்த உலகில் இல்லையா? என்று அர்ஜூனன் கேட்கின்றான். அதற்கு பகவான் ஸ்ரீ கண்ணன் விளக்கமளிக்கின்றார்.

இவர்கள் தாங்கள் அடைந்த மெய்ஞ்ஞானத்தினாலே, தன்னுடைய உண்மை சொரூபத்தை அறிந்து, சீவன் முக்தனாக ஆகியவுடன், அந்த ஞானி தன் சொரூபத்திலேயே நிலைத்து நின்றாலும், அவருக்கு இந்த உலகக் காட்சிகள்,

உலக விவகாரங்கள் எல்லாமே நடை முறையில் இருக்கத்தான் செய்யும்.

ஆனால், இவைகள் அனைத்தும் '**தோற்ற மாயை**' என்ற உண்மை '**அறிவு**' மட்டும் இந்த ஞானியிடம் எப்பொழுதும் இருக்கும்.

இது எப்படி என்றால், பாலைவனத்திலே தாகத்தில் தவிக்கும் ஒருவன் ஒரு நீர் நிலையைப் பார்க்கின்றான். உடனே, நீர் அருந்தும் ஆர்வத்துடன், அந்த நீர் நிலையின் அருகில் சென்றுப் பார்க்கின்றான். அவனுக்கு புரிந்து விட்டது. இது வெறும் **கானல் நீர்** என்று.

அவ்வாறு அதன் உண்மைத் தன்மைய அவன் அறிந்துக் கொண்டதினால், அவன் முன்பு இருந்த அந்த நீர் முற்றிலுமாக மறைந்து விடவில்லையே. அது அப்படியேதான் இருக்கின்றது.

அவ்வாறே, இந்த மெய்ஞ்ஞானத்தை அடைந்த ஒரு ஞானிக்கு, இந்த உலகம் '**மித்யா**' என்ற '**அறிவு**' (ஞானம்) உண்டாகி விட்டாலும், அவர்கள் முன்பு காணப்படுகின்ற இந்த உலகம், விவகாரத்திற்கு இருக்கத்தான் செய்யும்.

அதாவது, பிரம்மத்தின் பிரிக்க முடியாத சக்தியான மாயையில் இந்த உலகம் பிரதிபிம்பித்து, உபாதியான மனித மனங்களிலே அவைகளை உண்மைப் போன்று ஏற்றி

வைக்கப்பட்டுள்ளன என்ற புரிதல் இவர்களுக்கு நன்றாக இருக்கும்.

இந்த உலகம் வெறும் தோற்றம் மாத்திரம்தான் என்பதை சாஸ்திரங்களை கற்றறிந்து, மனதை விசாரித்து அறிந்துக் கொண்ட மெய்ஞானி மட்டுமே அதனால் பாதிக்கப் படாதவராக மனம் மயங்காமல் இருக்கின்றார்.

மற்ற அஞ்ஞானிகளுக்கு (அறியாமை ஜெனங்களுக்கு) இந்த உண்மைத் தெரியாத காரணத்தினாலே, இந்த உலகத்தை உண்மை என்று கருதிக் கொண்டு, மனம் மயங்கி அதன் விவகாரங்களில் சுக, துக்கங்களை அடைகின்றனர்.

சனக மஹாராஜாவைப் போன்ற சீவன் முக்தர்கள் '**தன்னை அறிந்த தத்துவ ஞானிகள்**' என்பதினால், இவர்கள் இந்த உலக விவகாரங்களில் ஈடுபட்டுக் கொண்டிருந்தாலும், இதனால், பாதிக்கப்பட மாட்டார்கள்.

<u>பாடல் 93</u>

*<u>அர்ஜுனன் கேட்கின்றான்:– சீவன்முக்தர் லக்ஷணம் யாது?</u>*

**சீவன்முக்தி அடைந்தோர்கள் செயலும் அவர் தம்குணமும்**
**நா உரைக்கும் வாசகமும் நான் அறியச் சொல்லுமென.**

**பொருள்:**

சீவன்முக்தி அடைந்தவர்களுடைய செயல்களும், நற்குணங்களும், அவர்கள் பேசுகின்ற வார்த்தைகளும் நான் அறிந்துக் கொள்ளும்படி உபதேசித்தருள வேண்டும் என்று அர்ஜுனன் கேட்கின்றான்.

**பாடல் 94**

*கண்ணனின் பதில் :– அனைத்தும் உடலுக்கு என்றிருப்பார்?*

**வரும் கருவு பிறப்பினொடு வளர்தல் பருத்தல் குறைதல்**
**ஒருங்கலும் மெய்க்கு என்றதனைப் ஒறுத்திருப்பார்**
**என்றவரோ.**

**பொருள்:**

சீவன் முக்தர்கள் தங்கள் வினைப் பயனுக்கு ஏற்ப, கர்ப்பத்தில் இருத்தல், பிறத்தல், வளர்தல், மாறுதல், தேய்தல், அழிதல் என்னும் ஆறு மாறுபாடுகளும், இந்த பரு உடலுக்கே என்று அதனைப் பற்றாது விலகியிருப்பார்கள் என்றருளிய பகவான் நீர்தானோ!

**விளக்கம்:–**

இந்த ஸ்தூல சரீரம் (பரு உடல்) எத்தகைய தன்மை கொண்டது, இதனுடைய நிலையாமை அல்லது நிலைத்தன்மை என்ன?, என்பதை ஆராய்ந்து அறிய முற்பட்டால், இந்த சரீரத்தில் ஏற்படும் ஆறு விதமான மாற்றத்தினை மனிதர்களாகிய நாம் அனைவரும் கண்கூடாகக் காண்பதே ஆகும்.

அவைகள்,

**அஸ்தி** – தாயின் வயிற்றில் இருத்தல்
**ஜாயதே** – பிறத்தல்
**வர்த்ததே** – வளர்தல்
**விபரிணமதே** – மாற்றமடைதல்
**அபக்ஷீயதே** – தேய்தல்
**வினஷ்யதி** – அழிதல்

என்ற ஆறு மாற்றங்களுக்கு உட்பட்டது.

அதாவது, இந்த ஸ்தூல சரீரம் முதலில் கர்ப வாஸம் (தாயின் வயிற்றில் இருக்கின்ற நிலை), இரண்டாவது பிறத்தல், மூன்றாவது வளர்தல், நான்காவதாக வளர்ச்சி நின்று, தோற்றத்தில் மாறுதல் (வயதான தோற்றம்) உண்டாதல், ஐந்தாவது வயதான காரணத்தினால் உறுப்புகள் தேய்ந்துக்

கொண்டு வருதல், ஆறாவது மரணம். என்ற இந்த ஆறு நிலைகளில், ஆறு மாற்றங்களுக்கு உட்பட்டதுதான் இந்த **"ஸ்தூல சரீரம்"** ஆகும். இந்த வேறுபாடுகள் அனைத்தும் அழியக்கூடிய உடலுக்கே அன்றி, ஆன்மாவாகிய தனக்கு இல்லை என்பதில் தெளிவாக இருப்பார்கள் இந்த சீவன் முக்தர்கள்.

பாடல் 95

*கண்ணனின் பதில் தொடர்கின்றது :–*

*செயல்கள் அனைத்தும் கரண தர்மங்கள்!*

**பார்ப்பதுவும் கேட்பதுவும் பகர்வதுவும் செல்வதுவும்**
**ஏற்பதுவும் கரணதன்மம் எனத் துணிவார் என்றவரோ.**

பொருள்:

பார்ப்பதும், கேட்பதும், பேசுவதும், நடப்பதும், வாங்குவதும் ஆகிய அனைத்துமே ஞானேந்திரியங்கள் மற்றும் கர்மேந்திரியங்களின் தர்மங்கள் என்பதை, நன்கு அறிந்துக் கொண்டிருப்பார்கள் இந்த சீவன் முக்தர்கள் என்றருளிய பகவான் நீர்தானோ.

<u>பாடல் 96</u>

*உணர்ச்சிகள் எல்லாம் மனதின் தர்மங்கள்!*

**பசிதாகம் உயிர்க்கு எனவே பயம் துக்கம் சுகம் காமம்**
**வசிகோபம் மதிக்கு எனவே மகிழ்ந்திருப்பார் என்றவரோ.**

<u>பொருள்:</u>

பசியும், தாகமும் பிராணனுக்கென்றும், பயம், துக்கம், சுகம், காமம், குற்றமுடைய கோபம் போன்றவைகள் அந்தக்கரணமான மனதிற்கென்றும், (ஆன்மாவிற்கு இவைகள் ஒன்றுமில்லை என்று) எப்பொழுதும் மகிழ்ச்சியோடு இருப்பார்கள் இந்த சீவன் முக்தர்கள் என்றருளிய பகவான் நீர்தானோ!

<u>பாடல் 97</u>

*தாமரை இலை நீர் போல் வாழ்வர்!*

**வீடும் தாரமும் உறவும் மேவியென்றும் இருந்தாலும்**
**நீடும் தாமரை இலைநீர் நிகராவார் என்றவரோ.**

<u>பொருள்:</u>

வீடும், மனைவியும், மற்ற உறவுகளும் இவர்களுடன் சேர்ந்து இருந்தாலும், தாமரை இலையில் உள்ள தண்ணீர் போன்று, அதில் ஒட்டியும் ஒட்டாமல் பற்றற்று வாழ்வர் இந்த சீவன் முக்தர்கள் என்றருளிய பகவான் நீர்தானோ!

<u>பாடல் 98</u>

*புளியம்பழமும் ஓடும் போல் வாழ்வர்!*

**பற்றிடும் காயமும்தானும் பன்னாள் ஒன்றாயினும் பின்**
**உற்ற புளியம்பழமும் ஓடும் ஒப்பார் என்றவரோ.**

<u>பொருள்:</u>

அஞ்ஞான காலத்தில் இருந்த பொழுது, தானென்று பற்றிடும் இந்த உடலும், மெய்ஞ்ஞானத்தை அடைந்த பிறகு, ஆன்மாவாகிய தானும் பலகாலம் ஒன்றாக சேர்ந்திருந்தாலும், புளியம்பழமும் அதன் ஓடும் போன்று, ஒன்றுடன், ஒன்று ஒட்டாமல் சேர்ந்து இருப்பதுப் போன்று, இந்த உலகத்துடன் சேர்ந்து இருந்தாலும், அதனுடன் பந்தமில்லாமல், ஒட்டாமல் வாழ்வர் இந்த சீவன் முக்தர்கள் என்றருளிய பகவான் நீர்தானோ.

<u>பாடல் 99</u>

*ஒட்டாமல் வாழ்வர்!*

**கூறும் உலகு இயற்கையுடன் கூடினும் மெய்ஞானம் வந்தோர்
சேறும்பிள்ளைப் பூச்சியும்போல் திரிவார்காண் என்றவரோ.**

<u>பொருள்:</u>

மெய்ஞ்ஞானம் உள்ள சீவன் முக்தர்கள், பெரியோர்கள் கூறுகின்ற உலக வழக்கத்துடன், இந்த இயற்கைக்கு முரண்படாமல் சேர்ந்து வாழ்ந்தாலும், சேற்றில் திரிகின்ற பிள்ளைப்பூச்சி, அந்த சேறுடன் ஒட்டாமல் இருப்பதுப் போன்று, இவர்களும் இந்த உலகத்துடன் சேர்ந்து வாழ்ந்தாலும், அதனுடன் ஒட்டாமல் இருப்பர் என்றருளிய பகவான் நீர்தானோ!

<u>பாடல் 100</u>

*கலங்காமல் வாழ்வர்!*

**ததியூடு கடைந்த வெண்ணெய் தான்மோரில் கிடப்பதுபோல்
மதியோடு கூடினும்பின் மயங்கார்காண் என்றவரோ.**

<u>பொருள்:</u>

தயிரைக் கடைந்து வந்த வெண்ணெய், மோரின் மேல் கலத்தல் இன்றி, அதனுடன் சேராமல், தனித்து இருப்பது போன்று, (நித்ய அநித்ய வஸ்து விவேகம் வந்து, ஆன்மாவைப் பிரித்தறிந்த பின்னர்கூட, பிராரப்த கர்மம் இருக்கும் வரை) இவர்களது மனதோடுகூடி, பற்பலக் காரியங்களைச் செய்யினும், மனதைத் 'தான்' என்று ஒரு பொழுதும் மயங்க மாட்டார்கள் இந்த சீவன் முக்தர்கள் என அறிந்து கொள்வாயாக, என்றருளிய பகவான் நீர்தானோ.

<u>பாடல் 101</u>

*<u>புண்ணியரே கண்வளரீர்</u>*!

**அருச்சுனன்தன் பொருட்டாக அனைவருக்கும் ஞானம்வரப்
பொருந்திய தேசிக வடிவாம் புண்ணியரே கண் வளரீர்!**

<u>பொருள்:</u>

அர்ஜுனனின் நிமித்தமாக, மெய்ஞ்ஞானத்தை அடைய வேண்டிய அனைத்து முமுக்ஷுக்களுக்கும் '**மெய்ஞ்ஞானம்**' உண்டாகும் விதமாக (உபநிஷத் தத்துவத்தை) உபதேசிக்க வந்த சத்குரு வடிவாகிய புண்ணியரே உறங்குவீராக.

<u>பாடல் 102</u>

*பேரொளியே கண்வளரீர்!*

**ஆயர்குல மாதர் அளவு இலோ ரைப்புணர்ந்தும்
தூயபதி னாறு ஆயிரவருடன் தோய்ந்து இருந்தும்,**

<u>பொருள்:</u>

இடையர் குலப்பெண்கள் பலரோடு சேர்ந்திருந்தும், தூய்மையான பதினாறாயிரம் ராஜகுல மங்கையரோடு கலந்திருந்தும்,

<u>பாடல்: 103</u>

*ஆன்ம தத்துவத்தை மறவாமல் இருப்பதே பிரம்மச்சர்யம்!*

**பரம முனிவர் முன்னே பரிச்சித்தைத் தீண்டியன்று
பிரமசரி யம்செலுத்தும் பேரொளியே கண்வளரீர்.**

<u>பொருள்:</u>

அந்நாளில், உத்திரையின் வயிற்றில், கர்பத்தில் உயிரற்ற குழந்தையாய் இருந்த பாண்டவர்களின் பேரனாகிய பரிக்ஷித்தை, மேலான பல முனிவர்கள் முன்னிலையில், "நான்

**நித்ய பிரம்மச்சாரி**" என்று கூறி, தங்கள் வாக்கை மெய்பித்து, அவளது வயிற்றைத் தொட்டு உயிர்கொடுத்த, அனைவரின் இருதய குகைக்குள்ளே சைதன்யமாக இருந்துக் கொண்டு, எல்லோரையும் வாழ்விக்கின்ற அறிவுப் பிரகாசமே, ஆனந்தப் பேரொளியே கண்ணுறங்கு! என்பதாக இந்த தாலாட்டுப் பாடல்கள் இத்துடன் நிறைவடைகின்றன.

**<u>விளக்கம்:</u>**

ஸ்ரீ கண்ணபகவான் லீலையாய் பல பெண்களோடு இருப்பதாக சித்தரிப்பதும், பல மனைவிகளை மணந்துக் கொண்டதாக காட்டப்படுவதும் எல்லாமே, அந்த ஏக இறைவனான அவனே, அனைத்து சீவர்களின் உடலுக்குள்ளே உயிராக, உன்னத ஆன்மாவாக இருந்துக் கொண்டு, அவைகளை இயக்குகின்றான் என்பதின் அடிப்படையிலே மட்டுமே கூறப்பட்டதே தவிர, உண்மையாக அத்தனை மனைவிகளை மணந்து வாழ்வது என்பது, நடைமுறையில் சாத்தியமாகாது என்பது அறிவில்லாத மூடன்கூட நன்கு அறிவான்.

ஆன்மாவாக இருந்தாலும் ஆன்ம தத்துவத்தை ஒரு நாளும் மறவாமல் இருப்பதே '**பிரம்மச்சர்யம்**' என்றும், உலக விவகாரங்கள் எப்படி இருந்தாலும், ஆன்மா நிர்விகாரம் என்று

அறிந்து, மனதில் மாறுபடாமல் இருப்பதே சீவன் முக்தி நிலை என்பதை உணர்த்துவதே இங்கு தாத்பரியம்.

## பாடல் 104

*கேட்டோர் முக்தி பெறுவர்!*

**ஆதிமூ லம்விசயற்(கு)ஆதிமறை யின்பொருளை**
**ஓதி உணர்த்திய இவ்வுண்மையினைக் – காதலுற்றுக்**
**கற்றோரும் கேட்டோரும் காசினியில் வாழ்ந்துமுக்தி**
**பெற்றோர்கள் முத்தர்பெறும் பேறு!**

**பொருள்:**

அனைத்திற்கும் முதற் பரம்பொருளான ஸ்ரீ கண்ண பரமாத்மா, பழமையான வேதத்தின் உட்பொருளை அர்ஜுனனுக்கு உபதேசித்து உணர்த்திய, இந்த மெய்ப்பொருள் உண்மையினை, ஆவலுடன் சத்குரு வாயிலாகக் கற்பவர்களும் கேட்பவர்களும், இதே உலகத்தில் சீவன் முக்தர்களாய் வாழ்ந்து, முக்தி பெற்றோர்கள் பெரும் பேரான "**விதேக கைவல்யம்**" என்ற பிறவாப் பெரு நிலையை அடைவார்கள் என்பது திண்ணம்.

**கீதாசாரத் தாலாட்டு நிறைவுற்றது.**



# பராபரம் இணையதள முகவரி

**https://paraparam.in/books/**

# கீதாசாரத் தாலாட்டு



பிரக்ஞன்